உ

குமரகுருபரர் அருளிய

கந்தர் கலிவெண்பா

(உரையுடன்)



வழக்கறிஞர்

பண்டித நா. ஏகாம்பரம்

1955

உ

செந்திலாண்டவன் துணை

குமரகுருபரசுவாமிகள் அருளிச்செய்த

திருச்செந்தூர்க்

கந்தர் கலிவெண்பா

மூலமும்

வட்டுக்கோட்டை

வழக்கறிஞரும் சைவப்புலவருமாகிய

பண்டித நா. ஏகாம்பரம் அவர்கள் செய்த

உரையும்

யாழ்ப்பாணம், இராசகுமாரன் அச்சகத்தில்

பதிப்பிக்கப்பெற்றன.

1955

பதிப்புரிமை ஆசிரியர்க்குரியது

உரிமையுரை

திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா
என்னும் இந்நூலுக்கு
என்னாற் செய்யப்பட்ட இவ்வுரையை
எனது தமிழாசிரியராகிய
நவாலியூர்,
சைவத் திருவாளர்,
க. சோமசுந்தரப் புலவர் அவர்கட்கு
உரிமையாக்குகின்றேன்.

சிறப்புப் பாயிரம்

வட்டுக்கோட்டை
பிரமஸ்ரீ க. குருமூர்த்தி சிவாசாரியரவர்கள்
செய்தது.

ஆசிரியப்பா

உலகெலா மீன்ற திலகவா ணுதலாள்
அரசியல் புரிந்த பொருநீர்ப் பொருநை
நாட்டினிற் கைலாச நகரினில் வாழ்ந்த
சண்முக சிகாமணிப் பண்புறு புலவன்
சிவகாம சுந்தரித் தேவியொ டியற்றிய
தவத்தினிற் பிறந்த புவிக்கொரு புலவனும்
குமரகு ருபரத் தமிழ்மா முனிவன்
சீரலை வாய்வரு சேயடி போற்றி
மூகை தீர்ந்த ஓகைசேர் கந்தர்
கலிவெண் பாவெனும் மலிசீர் நூற்குக்
கருத்துப் பதப்பொருள் காட்டு முதலா
அமைத்தே யின்றி யமையா யாவையும்
விளக்கியோர் விருத்தி யுரையினைச் செய்தான்
ஈழமாம் நாட்டினில் விழவுச்சீர் யாழ்ப்பாணந்
தனக்கோர் முடியாம் வட்டுமா நகரில்
குவளை மார்பினர் குலந்தனை விளக்கும்
நாகநா தபிள்ளை நன்மக வானோன்
சோம சுந்தரத் தோன்றல் தன்னிடை
இலக்கண விலக்கியம் மலக்கண மகற்றும்
சைவநூல் கற்றோன் சிவநெறி வாழ்வோன்
கூடலிற் றமிழ்மொழி யவையம் பண்டிதன்
என்று பரவிய நன்றிகொள் பாவலன்
வழக்கறி ஞனும் வாழ்வினைப் பெற்றோன்
என்னுளங் கொண்ட ஏகாம் பரமெனும்
இத்தரை போற்றும் வித்தகன் றனே.

உ

முருகன் துணை

முகவுரை

"வந்த வினையும் வருகின்ற வல்வினையும்
கந்தனென்று சொல்லக் கலங்குமே—செந்திநகர்ச்
சேவகா வென்று திருநீ றணிவார்க்கு
மேவவா ராதே வினை."

தமிழ்நாட்டிலே பிறந்த சைவநன்மக்கள் இறைவனை வழிபடுவதற்குக் கொள்ளப்பட்ட வழிபாட்டு நூல்கள் பல. அவற்றுள் "திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா" என்பதும் ஒன்று. இந்நூல் குமரகுருபர சுவாமிகளால் திருச்செந்தூரில் செந்திலாண்டவன் சந்நிதியில் அருளிச்செய்யப்பட்டது.

இக் கந்தர் கலிவெண்பா, திருச்செந்தூரிலெழுந்தருளியிருக்கும் சண்முகப் பெருமான்மீது கலிவெண்பா என்னும் பாவினால் பாடப்பெற்றது. இச் செய்யுள் நூற்றிருபத்திரண்டு கண்ணிகளைக் கொண்டது இந்நூல் சிவபெருமானின் சொரூபலக்கணம் முதலாகிய சைவசித்தாந்த நுட்பங்களையும், முருகப்பெருமானின் சொரூபநிலையையும், அவரின் திருமுகங்களின் செயல்களையும், அவரின் திருக்கரங்களின் செயல்களையும், அவரின் அலங்காரத்தையும் அவர் பற்பல உருவாய் விளங்கும் தன்மையையும், அவரின் திருவவதாரத்தையும், அவரின் திருவிளையாடல்களையும், அவர் எழுந்தருளியிருக்கும் திருப்பதிகளையும், அவர் அடியாரின் வேண்டுகோளையும் தன்னகத்தே கொண்டு மிளிர்வது. கந்தபுராணச் சரித்திரத்தைச் சுருக்கமாகக் கூறுவது. இலக்கியச் சுவையையும் பக்திச் சுவையையும் ஒருங்கே கொண்டு ஓதுவோரின் நெஞ்சை நெக்குருகச் செய்வது.

இந்நூற்கு பல அறிஞராற் செய்யப்பட்ட உரைகளிருந்தபோதிலும் முருகப்பெருமான்மீதுள்ள பேரன்பினால் இந்நூலைப் புத்துரையோடு வெளியிடத் துணிந்

தேன். நான் பாராயணஞ் செய்யுங் காலங்களில் எனக்குத் தோன்றிய கருத்துக்களை குறித்துவைத்து எனது நண்பர் சிலருக்குக் காட்டினேன். அவர்கள், அக் கருத்துக்களைப் புத்தக ரூபமாக வெளியிடவேண்டுமென்று பணித்தார்கள். முருகப்பெருமான் மீதுள்ள இடையறு அன்பும் நண்பரின் ஊக்கமும் சிற்றறிவுடையோனாகிய என்னை, இந்நூலை வெளியிடும்படி தூண்டின.

பாராயணம் பண்ணுவோர்க்குப் பயன்பெறும்பொருட்டுச் சந்தி பிரியாது சீர்பிரித்து மூலத்தைத் தொடர்ச்சியாக வெளியிட்டிருக்கின்றேன. உரைப்பகுதியிலுள்ள மூலத்தைப் படிப்போர் எளிதில் உணரும்பொருட்டுச் சந்தி பிரித்து பொருளுக்கேற்றவாறு பகுதிகளாகப் பிரித்து வெளியிட்டிருக்கின்றேன். பதவுரை, கருத்துரை, விசேடவுரை மூன்றையும் எனது சிற்றறிவிற்கெட்டியவாறு செய்திருக்கின்றேன். இந்நூலில் பல பிழைகளிருக்குமென்பது திண்ணம். ஆகையால் இந்நூலைப் படிக்கும் அறிஞர்கள் குற்றங் காணுங்கால் அவற்றை எனக்கு அறிவிக்குமாறு தயவாக வேண்டிக்கொள்ளுகின்றேன்.

இந்நூலை வெளியிடும்படி எனக்கு ஊக்கமளித்த எனது நண்பர்க்கும், உரையெழுதும்பொழுதும் அச்சாகும்பொழுதும் பிழைகளைத் திருத்தியும் அச்சுத்தாள்களை ஒப்புநோக்கியும் உதவிபுரிந்த எனது உழுவலன்புமிக்க நண்பரும் வடமொழி தென்மொழி வல்லுநருமாகிய பிரமஸ்ரீ க. குருமூர்த்தி சிவாசாரியர் அவர்கட்கு எனது நன்றி என்றும் உரித்தாகும். இந்நூலை நல்லமுறையில் பதிப்பித்த இராசகுமாரன் அச்சகத்தாருக்கும் எனது நன்றி உரித்து.

இத் திருத்தொண்டில் ஈடுபடும்படி என் மனத்தினுள்ளே புகுந்து என்னை ஊக்குவித்த அடைக்கலந்தோட்டத்தி லெழுந்தருளியிருக்கும் கந்தப்பெருமானின் திருவருளை வியந்து அவரின் திருவடித் தாமரைகளை மனமொழி மெய்களால் என்றும் வணங்குகின்றேன்.

மயிலகம்
வட்டுக்கோட்டை
6–6–1955

இங்ஙனம்
நா. ஏகாம்பரன்

இந்நூலாசிரியராகிய

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் வரலாறு

குமரகுருபர சுவாமிகள் பாண்டிவளநாட்டிலே ஸ்ரீ வைகுண்டம் என்னும் திருப்பதிக்கு வடபாலுள்ள ஸ்ரீ கைலாசம் என்னும் ஊரில் சைவவேளாளர் குலத்தில் ஏறக்குறைய முன்னூறு வருடங்களுக்குமுன் சண்முக சிகாமணிக் கவிராயருக்கும் சிவகாமசுந்தரியம்மைக்கும் நெடுநாள் புத்திரப்பேறின்றியிருந்து, முருகக்கடவுளது திருவருளால் பிறந்தவர். இப்பிள்ளை ஐந்து வயதாகியும் பேசாமையால் ஊமையென நிச்சயித்து தாய்தந்தையர் இருவரும் திருச்செந்தூர் சென்று செந்திலாண்டவன் சந்நிதியில் பிள்ளையைக் கிடத்தித் தாமும் வரங்கிடந்து, குறித்தநாளில் பிள்ளை பேசாவிட்டால் உயிர்போக்க நிச்சயித்தனர் அந்நாளில் முருகக்கடவுள் அருச்சகர் வடிவத்துடன் பிள்ளைக்குமுன் எழுந்தருளி நாவில் சடக்ஷரம் எழுதித் தரிசனத்திற்கு வரும்படி கட்டளையிட்டு மறைந்தனர். பிள்ளை, எழுந்து அம்மா, அப்பா என தாய்தந்ையரை எழுப்பிக் "கந்தர் கலிவெண்பா" என்னும் பிரபந்தத்தை அருளிச்செய்தனர்.

பின்பு, இவர் மதுரைமாநகர்க்குப் போய் அவ்விடத்திலே மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் பாடி, அக்காலத்தரசராயிருந்த திருமலைநாயக்கரின் முன்பு அரங்கேற்றி, அவர் வேண்டுகோளின்படி மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை யிரட்டைமணிமாலை, மதுரைக் கலம்பகம், நீதிநெறிவிளக்கம் முதலிய நூல்களைச் செய்தனர்.

பின்பு தருமபுரஞ் சென்று அங்கே குருமூர்த்தியாய் விளங்கிய ஸ்ரீ மாசிலாமணி தேசிக பரமாசாரிய சுவாமிகளை

ஆசிரியராகப் பெற்று ஞானமடைந்து அவர் கட்டளைப் படி காசி யாத்திரை செய்தார். காசியிலிருக்கும்பொழுது சரஸ்வதி யனுக்கிரகத்தால் இந்துஸ்தானி பாஷையைக் கற்று டில்லி பாதுஷாவைக் கண்டு அவரிடம் ஓர் நிலத்தைப் பெற்று அங்கே மடங்கட்டி மீண்டும் தருமபுரம் வந்து தமது குருமூர்த்தியைத் தரிசித்து அவர் உத்தரவுப்படி காசியில் சிலகாலந் தங்கி இறைவன் திருவடியிற் கலந்தனர்.

இவர் செய்த நூல்கள்: கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை யிரட்டைமணிமாலை, மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், திருவாரூர் நான்மணிமாலை, முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச்செய்யுட்கோவை, சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை, பண்டார மும்மணிக்கோவை, காசிக் கலம்பகம், சகலகலாவல்லி மாலை முதலியன. இவைகள் சிறந்த இலக்கியங்களென்று தமிழறிஞர்களாற் பாராட்டப்பட்டு வருகின்றன. இவருடைய பிரபந்தங்களைக் குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு என்னும் பெயருடன் ஒருங்குதிரட்டி அச்சிட்டு வழங்குகின்றனர். சிவப்பிரகாச சுவாமிகள், சிவஞானமுனிவர் என்பவர்கள் செய்த பிரபந்தங்களையும் இவ்வாறே பிரபந்தத் திரட்டுக்களாக அச்சிட்டு வழங்குகின்றனர்.

உ

செந்திலாண்டவன் துணை

திருச்செந்தூர்க்

கந்தர் கலிவெண்பா

1 பூமேவு செங்கமலப் புத்தேளுந் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையும்—தேமேவு
2 நாதமுநா தாந்த முடிவு நவைதீர்ந்த
போதமுங் காணாத போதமாய்—ஆதிநடு
3 அந்தங் கடந்தநித்தி யானந்த போதமாய்ப்
பந்தந் தணந்த பரஞ்சுடராய்—வந்த
4 குறியுங் குணமுமொரு கோலமுமற் றெங்கும்
செறியும் பரம சிவமாய்—அறிவுக்
5 கனாதியா யைந்தொழிற்கு மப்புறமா யன்றே
மனாதிகளுக் கெட்டா வடிவாய்த்—தனாதருளின்
6 பஞ்சவித ரூப பரசுகமா யெவ்வுயிர்க்கும்
தஞ்சமென நிற்குந் தனிப்பொருளாய்—எஞ்சாத
7 பூரணமாய்நித்தமாய்ப் போக்குவரவும்புணர்வும்
காரணமு மில்லாக் கதியாகித்—தாரணியில்
8 இந்திரசா லம்புரிவோன் யாவரையுந் தான்மயக்குந்
தந்திரத்திற் சாராது சார்வதுபோல்—முந்தும்
9 கருவின்றி நின்ற கருவா யருளே
உருவின்றி நின்ற வுருவாய்த்—திரிகரணம்
10 ஆகவரு மிச்சை யறிவியற்ற லாலிலய
போகவதி காரப் பொருளாகி—ஏகத்
11 தருவு மருவு முருவருவு மாகிப்
பருவ வடிவம் பலவாய்—இருண்மலத்துள்

12 மோகமுறும்பல் லுயிர்க்கு முத்தியளித் தற்குமல
பாகமுற வேகடைக்கண் பாலித்துத்-தேகமுறத்

13 தந்த வருவுருவஞ் சார்ந்தவிந்து மோகினிமான்
பெந்த முறவே பிணிப்பித்து—மந்த்ரமுதல்

14 ஆறத்து வாவுமண்டத் தார்ந்தவத்து வாக்களுமுற்
கூறத் தகுஞ்சிமிழ்ப்பிற் கூட்டுவித்து-மாறிவரும்

15 ஈரிரண்டுதோற்றத் தெழுபிறப்புள்யோனியெண்பான்
ஆரவந்த நான்குநூ றாயிரத்துள் — தீர்வரிய

16 கன்மத்துக் கீடாய்க் கறங்குஞ் சகடம்போற்
சென்மித் துழலத் திரோதித்து—வெந்நிரய

17 சொர்க்காதி போகமெல்லாந் துய்ப்பித்துப் பக்குவத்
நற்காரணஞ்சிறிது நண்ணுதலும்—தர்க்கமிடும் [தால்

18 தொன்னூற் பரசமயந் தோறு மதுவதுவே
நன்னூலெனத்தெரிந்து நாட்டுவித்து-முன்னூல்

19 விரதமுத லாயபல மெய்த்தவத்தி னுண்மைச்
சரியைகிரி யாயோகஞ் சார்வித்—தருள்பெருகு

20 சாலோக சாமீப சாரூப மும்புசிப்பித்
தாலோகந் தன்னை யகற்றுவித்து—நால்வகையாம்

21 சத்திநி பாதந் தருதற் கிருவினையும்
ஒத்துவருங் கால முளவாகிப்—பெத்த

22 மலபரி பாகம் வருமளவிற் பன்னாள்
அலமருதல் கண்ணுற் றருளி—உலவா

23 தறிவுக் கறிவாகி யவ்வறிவுக கெட்டா
நெறியிற் செறிந்தநிலை நீக்கிப்—பிறியாக்

24 கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரனென்றோர் திருப்பேர்கொண்டு-திருநோக்கால்

25 ஊழ்வினையைப்போக்கி யுடலறுபத்தெட்டுநிலம்
ஏழுமத்து வாக்க ளிருமூன் றும்—பாழாக

26 ஆணவ மான படலங் கிழித்தறிவிற்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப்—பூணும்
27 அடிஞானத் தாற்பொருளு மான்மாவுங் காட்டிக்
கடியார் புவனமுற்றுங் காட்டி—முடியாத
28 தேக்குபர மானந்தத் தெள்ளமுத மாகியெங்கும்
நீக்கமற நின்ற நிலைகாட்டிப்—போக்கும்
29 வரவு நினைப்பு மறப்பும் பகலும்
இரவுங் கடந்துலவா வின்பம—மருவுவித்துக்
30 கன்மமலத் தார்க்குமலர்க் கண்மூன்றுந் தாழ்சடையும்
வன்மழுவு மானுமுடன் மால்விடைமேல்—மின்னிடத்
31 பூத்தபவளப்பொருப்பொன் றுவெள்ளிவெற்பில் [துப்
வாய்த்தனைய தெய்வ வடிவாகி—மூத்த
32 கருமமலக் கட்டறுத்துக்கண்ணருள்செய் துண்ணின்
றொருமலத் தார்க் கின்ப முதவிப்—பெருகியெழு
33 மூன் றவத்தை யுங்கழற்றி முத்தருடனேயிருத்தி
ஆன் றபர முத்தி யடைவித்துத்—தோன் றவரும்
34 யானெனதென் றற்ற விடமே திருவடியா
மோனபரா னந்த முடியாக—ஞானம்
35 திருவுருவா விச்சை செயலறிவு கண்ணா
அருளதுவே செங்கை யலரா—இருநிலமே
36 சந்நிதியா நிற்குந் தனிச்சுடரே யெவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே—மின்னுருவம்
37 தோய்ந்தநவ ரத்நச்சு டர்மணியாற் செய்தபைம்பொன்
வாய்ந்த கிரண மணிமுடியும்—தேய்ந்தபிறைத்
38 துண்டமிருமூன் றுநிரை தோன் றப்பதித்தனைய
புண்டரம் பூத்தநுதற் பொட்டழகும்—விண்ட
39 பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்
கருள்பொழியுங் கண்மலரீ ராறும்—பருதி

40 பலவு மெழுந்துசுடர் பாலித்தாற் போலக்
குலவு மகரக் குழையும்—நிலவுமிழும்
41 புன்முறுவல்பூத்தலர்ந்த பூங்குமுகச்செவ்வாயும்
சென்மவிடாய்தீர்க்குந் திருமொழியும்-வின்மலிதோள்
42 வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூர னைத்தடிந்து
தெவ்வருயிர் சிந்துந் திருமுகமும-எவ்வுயிர்க்கும்
43 ஊழ்வினையை மாற்றி யுலவாத பேரின்ப
வாழ்வுதருஞ் செய்ய மலர்முகமும்—சூழ்வோர்
44 வடிக்கும் பழமறைக ளாகமங்கள் யாவும்
முடிக்குங் கமல முகமும்—விடுத்தகலாப்
45 பாச விருடுரந்து பல்கதிரிற் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும்—நேசமுடன்
46 போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடி
மோக மளிக்கு முகமதியும்—தாகமுடன் [க்கும்
47 வந்தடியிற் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்
தந்தருளுந் தெய்வமுகத் தாமரையும்—கொந்த
48 வேரிக் கடம்பும் விரைக்குரவும் பூத்தலர்ந்த [விழ்ந்த
பாரப் புயசயிலம் பன்னிரண்டும்—ஆரமுதம்
49 தேவர்க் குதவுந் திருக்கரமுஞ் சூர்மகளிர்
மேவக் குழைந்தணைந்த மென்கரமும்—ஓவாது
50 மாரி பொழிந்த மலர்க்கரமும் பூந்தொடையல்
சேர வணிந்த திருக்கரமும—மார்பகத்தில்
51 வைத்த கரதலமும வாமமருங் கிற்கரமும்
உய்த்த குறங்கி லொருகரமும்—மொய்த்த
52 சிறுதொடிசேர் கையுமணி சேர்ந்ததடங்கையும்
கறுவுசம ரங்குசஞ்சேர் கையும்—தெறுபோர்
53 அதிர்கேட கஞ்சுழற்று மங்கைத் தலமும்
கதிர்வாள் விதிர்க்குங் கரமும்—முதிராத

54 கும்பமுலைச்செவ்வாய்க்கொடியிடையார்வேட்டணைந்த
அம்பொன்மணிப்பூணகன்மார்பும்-பைம்பொற்
55 புரிநூலுங் கண்டிகையும் பூம்பட் டுடையும்
அரைஞாணுங் கச்சை யழகும்—திருவரையும்
56 நாதக் கழலு நகுமணிப்பொற் கிண்கிணியும்
பாதத் தணிந்த பரிபுரமும்—சோதி
57 இளம்பருதி நூறா யிரங்கோடி போல
வளந்தருதெய் வீக வடிவும்—உளந்தனிற்கண்
58 டாதரிப்போர்க் காருயிரா யன்பரகத் தாமரை
மீதிருக்குந்தெய்வவிளக்கொளியே—ஓதியவைந் [யின்
59 தோங்காரத்துள்ளொளிக்குமுள்ளொளியாயைந்தொ
நீங்காத பேருருவாய் நின்றோனே—தாங்கரிய [ழிற்கும்
60 மந்திரமே சோரியா வானபதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப்—பந்தனையால்
61 ஒத்த புவனத் துருவே யுரோமமாத்
தத்துவங்க ளேசத்த தாதுவா—வைத்த
62 கலையே யவயவமாக் காட்டுமத்து வாவின்
நிலையே வடிவமா நின்றோய்—பலகோடி
63 அண்ட முருவாகி யங்கஞ் சராசரமாய்க் [படும்
கண்டசத்தி மூன்றுட் கரணமாய்த்—தொண்டு
64 ஆவிப் புலனுக் கறிவளிப்ப வைந்தொழிலும்
ஏவித் தனிநடத்து மெங்கோவே—மேவ
65 வருமட்ட மூர்த்தமாம் வாழ்வேமெய்ஞ் ஞானம்
தருமட்ட யோகத் தவமே—பருவத்
66 தகலாத பேரன் படைந்தோ ரகத்துட்
புகலாகு மின்பப் பொருப்பும்—சுகலளிதப்
67 பேரின்ப வெள்ளப் பெருக்காறும் மீதானம்
தேரின்ப நல்குந் திருநாடும்—பாரின்பம்

68 எல்லாங் கடந்த விருநிலத்துட் போக்குவர
வல்லா துயர்ந்த வணிநகரும்—தொல்லுலகில்
69 ஈறு முதலுமகன் றெங்குநிறைந் தைந்தெழுத்
கூறி நடாத்துங் குரகதமும்—ஏறுமதம் [தைக்
70 தோய்ந்து களித்தோர் துதிக்கையிறைப் பஞ்சமலம்
காய்ந்தசிவ ஞானக் கடாக்களிறும்—வாய்ந்தசிவ
71 பூரணத்துட் பூரணமாம் போதம் புதுமலரா
நாரகத்துட் கட்டு நறுந்தொடையும்—காரணத்துள்
72 ஐந்தொழிலு மோவா தளித்துயர்ந்த வான்கொ
வந்தநவ நாத மணிமுரசும்—சந்ததமும் [டியும்
73 நீக்கமின் றியாடி நிழலைசப்பான் போற்புவனம்
ஆக்கி யசைத்தருளு மாணையும்—தேக்கமழ்ந்து
74 வீசும் பனுவல் விபுதர் தனித்தனியே [கழ்
பேசுந் தசாங்கமெனப் பெற்றோனே—தேசுதி
75 பூங்கயிலைவெற்பிற்புனைமலர்ப்பூங்கோதையிடப்
பாங்குறையு முக்கட் பரஞ்சோதி—ஆங்கொருநாள்
76 வெந்தகுவர்க் காற்றாத விண்ணோர் முறைக்கிரங்
ஐந்து முகத்தோ டதோமுகமும்—தந்து [கி
77 திருமுகங்க ளாறாகிச் செந்தழற்க ணாறும் [ணம்
ஒருமுகமாய்த் தீப்பொறியா றுய்ப்ப—விரிபுவ
78 எங்கும் பரக்க விமையோர்கண் டஞ்சுதலும
பொங்குந் தழற்பிழம்பைப் பொற்கரத்தால்—அங்கண்
79 எடுத்தமைத்து வாயுவைக்கொண் டேகுதியென் றெம்மான்
கொடுத்தளிப்பமெல்லக்கொடுபோய்—அடுத்ததொரு
80 பூதத் தலைவகொடு போதியெனத் தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்றுய்ப்பப்—போதொருசற்
81 றன்னவளுங் கொண்டமைதற் காற்றாள்சரவணத்திற்
சென்னியிற்கொண் டுய்ப்பத் திருவுருவாய்—முன்னர்

82 அறுமீன் முலையுண் டழுது விளையாடி
நறுநீர் முடிக்கணிந்த நாதன்—குறுமுறுவற்
83 கன்னியொடுஞ்சென் றவட்குக் காதலுருக்காட்டுதலும்
அன்னவள்கண் டவ்வுருவ மாறிணையும்—தன்னிரண்டு
84 கையா லெடுத்தணைத்துக் கந்தனெனப்பேர்புனைந்து
மெய்யாறு மொன்றாக மேவுவித்துச்—செய்ய
85 முகத்தி லணைத்துச்சி மோந்து முலைப்பால்
அகத்துண் மகிழ்பூத் தளித்துச்—சகத்தளந்த
86 வெள்ளை விடையேல் விமலன் கரத்திலளித்
துள்ள முவப்ப வுயர்ந்தோனே—கிள்ளைமொழி
87 மங்கை சிலம்பின் மணியொன் பதிற்றோன்றும்
துங்க மடவார் துயர்தீர்ந்து—தங்கள்
88 விருப்பா லளித்தநவ வீரருக்குண் முன்னோன்
மருப்பாயுந் தார்வீர வாகு—நெருப்பிலுதித்
89 தங்கட் புவன மனைத்து மழித்துலவும்
செங்கட்கிடாயதனைச்சென் றுகொணர்ந்—தெங்கோன்
90 விடுக்குதியென் றுய்ப்பவதன் மீதிவர்ந்தெண் டிக்கும்
நடத்தி விளையாடும் நாதா—படைப்போன்
91 அகந்தை யுரைப்பமறை யாதி யெழுத்தொன்
றுகந்த பிரணவத்தி னுண்மை—புகன்றிலையால்
92 சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்ஙனென் றுமுனம்
குட்டிச் சிறையிருத்துங் கோமானே-மட்டவிழும்
93 பொன்னங் கடுக்கைப்புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரம மொழிந்தோனே-கொன்னெடு
94 றாரகனு மாயத் தடங்கிரியுந் தூளாக [வேற்
வீர வடிவேல் விடுத்தோனே—சீரலைவாய்த்
95 தெள்ளு திரைகொழிக்குஞ்செந்தூரிற்போய்க்கருணை
வெள்ள மெனத்தவிசின் வீற்றிருந்து-வெள்ளைக்

96 கயேந்திரனுக் கஞ்ச லளித்துக் கடல்சூழ்
மயேந்திரத்திற் புக்கிமையோர் வாழச்—சயேந்திரனும்
97 சூரனைச்சோ தித்துவரு கென்றுதடந் தோள்விசய
வீரனைத் தூதாக விடுத்தோனே—காரவுணன்
98 வானவரை விட்டு வணங்காமை யாற்கொடிய
தானவர்க ளற்படையுஞ் சங்கரித்துப்—பானுப்
99 பகைவன் முதலாய பாலருடன் சிங்க
முகனைவென்று வாகை முடித்தோய்—சகமுடுத்
100 வாரி தனிற்புதிய மாவாய்க் கிடந்தநெடுஞ் [த
சூருடலங்கீண்ட சுடர்வேலோய்—போரவுணன்
101 அங்கமிரு கூறு யடன மயிலுஞ் சேவலுமாய்த்
துங்கமுட னார்த்தெழுந்து தோன்றுதலும்—அங்கவ
102 சீறுமர வைப்பொருத சித்ரமயில் வாகனமா [ற்றுள்
ஏறி நடாத்து மிளையோனே—மாறிவரு
103 சேவற் பகையைத் திறல்சேர் பதாகையென
மேவத் தனித்துயர்த்த மேலோனே—மூவர்
104 குறைமுடித்து விண்ணங் குடியேற்றித் தேவர்
சிறைவிடுத்தாட் கொண்டளித்த தேவே—மறைமுடி
105 சைவக் கொழுந்தே தவக்கடலே வானுதவும் [வாம்
தெய்வக் களிற்றைமணஞ் செய்தோனே—பொய்விரவு
106 காம முனிந்த கலைமுனிவன் கண்ணருளால்
வாமமட மானின் வயிற்றுதித்துப்—பூமருவு
107 கானக் குறவர் களிகூரப் பூங்குயில்போல் [த்
ஏனற் புனங்காத் தினிதிருந்து—மேன்மைபெற
108 தெள்ளித் தினைமாவுந் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே-உள்ளமுவந்
109 தாறு திருப்பதிகண் டாறெழுத்து மன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே—நாறுமலர்க்

110 கந்திப் பொதும்பரெழு காரலைக்குஞ் சீரலைவாய்ச்
செந்திப் பதிபுரக்குஞ் செவ்வேளே—சந்ததமும்
111 பல்கோடி சன்மப் பகையு மவமிருத்தும்
பல்கோடிவிக்கினமும் பல்பிணியும்—பல்கோடி
112 பாதகமுஞ் செய்வினையும் பாம்பும் பசாசுமடற்
பூதமுந்தீ நீரும் பொருபடையும்—தீதகலா
113 வெவ்விடமுந் துட்ட மிருகமுத லாமெவையும்
எவ்விடம்வந் தெம்மை யெதிர்ந்தாலும்-அவ்விடத்திற்
114 பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டுதிண்டோ
அச்ச மகற்று மயில்வேலும்—கச்சைத் [ளும்
115 திருவரையுஞ் சீறடியுஞ் செங்கையு மீரா
றருள்விழியு மாமுகங்க ளாறும்—விரிகிரணம்
116 சிந்தப் புனைந்த திருமுடிக ளோராறும்
எந்தத் திசையு மெதிர்தோன்ற—வந்திடுக்கண்
117 எல்லாம் பொடிபடுத்தி யெவ்வரமுந் தந்துபுகுந்
துல்லாச மாக வுளத்திருந்து—பல்விதமாம்
118 ஆசுமுத னாற்கவியு மட்டாவ தானமுஞ்சீர்ப்
பேசுமியல் பல்காப் பியத்தொகையும்—ஓசை
119 எழுத்துமுத லாமைந் திலக்கணமுந் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமைபாலித்-தொழுக்கமுடன்
120 இம்மைப் பிறப்பி லிருவா தனையகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத்-தம்மைவிடுத்
121 தாயும் பழைய வடியா ருடன் கூட்டித்
தோயும் பரபோகந் துய்ப்பித்துச்—சேய
122 கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி யாட்கொண்
டடியேற்கு முன்னின் றருள்.

இதன் பொருள்

சிவபெருமானின் சொரூப இலக்கணம்

1 பூமேவு செங்கமலப் புத்தேளும், தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையும்,—தேமேவு
2 நாதமும், நாதாந்த முடிவும், நவைதீர்ந்த
போதமும், காணாத போதமாய்,—ஆதிநடு
3 அந்தங் கடந்த நித்தியானந்த போதமாய்ப்
பந்தந் தணந்த பரஞ்சுடராய்—வந்த
4 குறியும், குணமும், ஒருகோலமும் அற்று எங்கும்
செறியும் பரம சிவமாய்,

(இதன் பொருள்) செங்கமலப் பூமேவு புத்தேளும் - செந்தாமரைப் பூவில் வீற்றிருக்கின்ற பிரமதேவனும், தேறரிய - தெளிதற்கரிய, பாமேவு தெய்வப் பழமறையும் - பாட்டுநடையில் அமைந்த தெய்வத்தன்மையையுடைய பழையனவாகிய வேதங்களும், தேமேவு நாதமும் - இனிமையையுடைய நாததத்துவமும், நாதாந்த முடிவும் - நாத தத்துவத்தின் முடிவாகிய பொருளும், நவைதீர்ந்த போதமும் - குற்றமற்ற அறிவும், காணாத போதமாய் - அறியாத பேரறிவாயும், ஆதி நடு அந்தங் கடந்த - முதலும் இடையும் கடையும் இல்லாத, நித்தியானந்த போதமாய் - எக்காலமும் இன்பம் பொருந்திய அறிவு வடிவாகியும், பந்தம் தணந்த பரஞ்சுடராய் - (இயல்பாகவே) பாசங்களின் நின்றும் நீங்கிய பேரொளியாயும், வந்த குறியும் - வழங்கப்படுவதொரு பெயரும், குணமும் ஒரு கோலமும் அற்று - தன்மையும் வடிவும் இல்லாமல், எங்கும் செறியும் பரமசிவமாய் - எங்கும் நிறைந்திருக்கின்ற பரமசிவமாகியும் என்றவாறு.

(கருத்துரை) பிரமதேவனும், பழமையாகிய வேதங்களும் தெய்வத்தன்மை பொருந்திய நாததத்துவமும், அந் நாததத்துவத்தில் முடிந்த உண்மைப் பொருளும், குற்றமற்ற அறிவும் அறியக்கூடாததாய் ஓர் உருவமுமில்லாமல் எவ்விடத்தும் பொருந்தி விளங்குபவர் சிவ பெருமான் என்க.

(விசேடவுரை) ஒரு நூல் செய்யும்பொழுது முதலில் மங்கலச்சொல் வைத்துத் தொடங்குதல் மரபாதலின் இந் நூலாசிரியரும் பழைய மரபு வழுவாது "பூ" என்னும் மங்கலச் சொல்லை முதலில் வைத்தார். நாதம் என்பது நாத தத்துவம். இது சுத்தமாயையில் சாந்தியாதித கலையின்கண் விளங்குவது. ஆதி நடு அந்தம் கடந்த என்பதற்கு படைத்தல், காத்தல், அழித்தல் என்பவற்றைக் கடந்த எனினும் அமையும். நித்தியானந்த போதமாய் என்பது சச்சிதானந்த வடிவாகியும் என்று கூறினும் அமையும். முக்குணம் என்றது இராசதம், தாமதம், சாத்விகம் என்னும் முக்குணங்களை.

சிவபெருமானே தனிப் பரம்பொருள்

— அறிவுக்கு
5 அணுதியாய், ஐந்தொழிற்கும் அப்புறமாய், அன்றே
மனுதிகளுக்கு எட்டா வடிவாய்த்,—தனதருளின்
6 பஞ்சவித ரூப பரசுகமாய், எவ்வுயிர்க்கும்
தஞ்சம் என நிற்கும் தனிப்பொருளாய்,

(இ–ள்) அறிவுக்கு அணுதியாய் - அறிவிற்கு முற்பட்டதாயும், ஐந்தொழிற்கும் அப்புறமாய் - படைப்பு முதலாகிய ஐந்து தொழில்களுக்கும் அப்பாற்பட்டதாயும், மனுதிகளுக்கு எட்டா வடிவாய் - மனம் முதலிய கரணங்களுக்கு எட்டாத வடிவாயும், தனது அருளின் - தனது

திருவருளினால், பஞ்சவித ரூப பரசுகமாய் - ஐவகை வடிவினையுடைய பேரின்பப் பொருளாயும், எவ்வுயிர்க்கும் - எல்லா உயிர்கட்கும், தஞ்சம் என நிற்கும் தனிப்பொருளாய் - பற்றுக்கோடாக நிற்கும் ஒப்பற்ற பரம்பொருளாயும். எ - று.

(க—ரை) சிவபெருமான் ஞானத்திற்குத் தனிப்பட்டவராயும், படைப்பு முதலாய பஞ்சகிருத்தியங்களுக்கு அப்பாற்பட்டவராயும் மனம் முதலிய கரணங்களுக்கு எட்டாத வடிவமுடையவராயும் தனது கருணையினால் ஐந்துவகையான திருமேனியுடன் உலகத்திலுள்ள எல்லாவுயிர்களுக்கும் தான் பற்றுக்கோடென்று விளங்குகின்ற ஒப்புயர்வற்ற உண்மைப் பொருளாயுமுள்ளவர் என்க.

(வி—ரை) இறைவன் அநாதியாகவே முற்றறிவுடையனாதலின் அறிவுக்கு அநாதியாய் என்றார். ஐந்தொழிலாவது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன. மனாதி - மனம், வாக்கு, காயம் என்பன. ஐவகை வடிவென்பது பிரமன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன் முதலிய வடிவங்களை. இவற்றை

> "மாயன் பிரமன் உருத்திரன் மகேசனோ
> டாயுஞ் சிவமூர்த்தி யைந்து"

என்னும் ஔவை குறளினால் அறிக.

இதற்கு சிவன், சத்தி, சதாசிவன், மகேசுரன், உருத்திரன் என்றும் ஒருசாரார் கூறுவர். உலகத்திலுள்ள ஓரறிவுயிர்கள் முதல் ஆறறிவுயிர்கள் வரையுள்ள எல்லாவற்றிற்கும் துணையாயிருப்பதால் 'எவ்வுயிர்க்கும் தஞ்சம்' என்றார். தஞ்சம் - பற்றுக்கோடு, துணை.

சிவபெருமானே சகல கிரியைக்கும் அதிகாரி

—எஞ்சாத
7 பூரணமாய், நித்தமாய்ப், போக்குவரவும், புணர்வும்,
காரணமும், இல்லாக் கதியாகித்,—தாரணியில்
8 இந்திரசா லம்புரிவோன் யாவரையுந் தான்மயக்கும்
தந்திரத்திற் சாராது, சார்வதுபோல்—முந்தும்
9 கருவின்றி நின்ற கருவாய், அருளே
உருவின்றி நின்ற உருவாய்த்,—திரிகரணம்
10 ஆகவரும் இச்சை அறிவு இயற்றலால், இலய
போக அதிகாரப் பொருளாகி;

(இ—ள்) எஞ்சாத பூரணமாய் - குறையாத நிறைவுடையதாயும், நித்தமாய் - என்றும் உள்ளதாயும், போக்கும் வரவும் புணர்வும் - இறப்பும் பிறப்பும் சம்பந்தமும், காரணமும் இல்லா - (தனக்கு ஒரு) மூலமும் இல்லாத, கதியாகி - ஆதாரப் பொருளாகியும், தாரணியில் - இவ்வுலகத்தில், இந்திரசாலம் புரிவோன் - இந்திரசால வித்தையைச் செய்பவன், யாவரையும் தான்மயக்கும் தந்திரத்தில் சாராது - மற்றவர்களை மயக்குகின்ற தந்திரத்திலே தான் உட்படாது, சார்வதுபோல் - அதிற் கலந்து கொள்வதுபோல, முந்தும் கருவின்றி நின்ற கருவாய் - தனக்கு எவ்வித முதற்காரண மில்லாதிருந்தும் (தான் எல்லாவற்றிற்கும்) முதற்காரணமாயும், உரு இன்றி நின்ற அருளே உருவாய் - உருவமில்லாமல் நின்ற கருணையே திருவுருவாயும், திரிகரணம் ஆகவரும் இச்சை அறிவு இயற்றலால் - முக்கரணங்கள் காரணமாக வருகின்ற இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்திகளால், இலய போக அதிகாரப் பொருளாகி - இலயம் போகம் அதிகாரம் என்னும் பொருளாகியும். எ - று.

(க—ரை) சிமபெருமான் பிறப்பாகிய சம்பந்தமில்லா தவராயும் தனது விநோத விளையாட்டால் எவர்களையும் மயங்கச் செய்பவராயும், எதிலும் பொருந்தாமற் பொருந் துபவராயும் கருணையே திருவுருவமா யுடையவராயும் பல வேறு கிருத்தியங்களுக்குத் தான் அதிகாரியாகவு முள் ளவர் என்க.

(வி—ரை) எஞ்சாத பூரணமாய் - குறையாத நிறை வாகி "குறைவிலா நிறைவே" என்பது திருவாசகம் (கோயில் 5). 'போக்கும் வரவும் புணர்வும் காரணமு மில்லா' என்பதை "போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே" என வரும் திருவாசகச் செய்யுளோ டொப்பு நோக்குக (சிவபுராணம் வரி 77). கதி - எல் லாப் பொருள்களும் புகுந்து ஒதுங்கும் இடம்; மோட்சம். தாரணி - தன்மீதுள்ள எல்லாப் பொருள்களையும் தாங் குவது; பூமி. கருவின்றி நின்ற கரு - ஒன்றில் நின்றும் தோன்றாதது; சுயம்புவாய் நிற்பது. இறைவன், அருளே திருமேனியாகக் கொள்வன் என்பதை :—

"உருவருள் குணங்க ளோடும் உணர்வருள் உருவிற் றோன்றும்
கருமமும் அருளை ரன்றன் கரசர ணாதி சாங்கம்
தருமரு ளுபாங்க மெல்லாம் தானருள் தனக்கொன் றின்றி
அருளுரு உயிருக் கென்றே ஆக்கினன் அசிந்த னன்றே"

என்னும் சிவஞானசித்தியார் செய்யுளாலறிக. இச்சை - இச்சாசத்தி; இறைவன் உயிர்கட்கு மலத்தை நீக்கிச் சிவத்தை அளித்தற்கண் ணுள்ளதாகிய கருணை. அறிவு - ஞானசத்தி; சிவத்தை அளித்தற்குச் செய்யக்கடவதான உபாயங்களையெல்லாம் அறியும் அறிவு. இயற்றல் - கிரியா சத்தி; இறைவன் தனது கருணையால் உலகத் தோற்றம் முதலிய காரியங்களையெல்லாம் சங்கற்பித்துச் செய்யும் சங்கற்பம். இவற்றை

"ஒன்றதாய் இச்சா ஞானக் கிரியையென் றெருமூன் ருகி
நின்றிடுஞ் சத்தி இச்சை உயிர்க்கருள் நேச மாகும்
நன்றெலாம் ஞான சத்தி யால்நயந் தறிவன் நாதன்
அன்றருட் கிரியை தன்னல் ஆக்குவன் அகில மெல்லாம்"

என்னும் சித்தியார் திருவிருத்தத்தாலறிக. இலயம் - ஒன்றுதல். போகம் - துய்த்தல். அதிகாரம் - தொழில் புரிதல். இலயமென்பது ஞானசத்தியும் கிரியாசத்தியும் தனித்தனி வியாபித்து நிற்றல். போகமென்பது ஞான சத்தியும் கிரியாசத்தியும் தம்முள் ஒத்து வியாபித்து நிற்றல். அதிகாரமென்பது ஞானசத்தியும் கிரியாசத்தியும் தம்முள் ஏறிக் குறைந்து வியாபித்து நிற்றல். இறைவன் ஞானசத்தியால் அறிந்து கிரியாசத்தியால் பிரபஞ்சத்தை இயற்றுவன். இவ்விரண்டு சத்திகளும் இறைவனை விட்டு நில்லா. இறைவனும் இச்சத்திகளை விட்டு நில்லான்.

சிவபெருமான் ஆன்மாக்களுக்கு வினைப்பயனைக் கொடுத்து மறைத்தருளுதல்

—ஏகத்து

11 **உருவும், அருவும், முருவுஅருவும் ஆகிப்,**
பருவ வடிவம் பலவாய்,— இருண்மலத்துள்

12 மோகமுறும் பல்லுயிர்க்கும் முத்தியளித்தற்கு, மல
பாகமுறவே, கடைக்கண் பாலித்துத்,—தேகம் உறத்

13 **தந்த வருவுருவம் சார்ந்த விந்து மோகினிமான்**
பெந்தம் உறவே பிணிப்பித்து,—மந்த்ரமுதல்

14 ஆறு அத்துவாவும், அண்டத்து ஆர்ந்த அத்துவா [க்களும், முற்
கூறத்தகும்சிமிழ்ப்பில் கூட்டுவித்து,-மாறிவரும்

15 ஈர்இரண்டுதோற்றத்துஎழுபிறப்புள்யோனிஎண்பான்
ஆரவந்த நான்குநூறு ஆயிரத்துள்—தீர்வரிய
16 கன்மத்துக்கு ஈடாய்க் கறங்கும் சகடம்போல்
சென்மித்து உழலத் திரோதித்து,

(இ-ள்) ஏகத்து - ஒரு வடிவிலேயே, உருவும் - உருவத் திருமேனியாயும், அருவும் - அருவத் திருமேனியாயும், அருஉருவும் ஆகி - அருவுருவத் திருமேனியாயும், பருவ வடிவம் பலவாய் - (ஆன்மாக்களின்) பக்குவநிலைக்கேற்றவாறு கொள்ளப்பெறும் உருவங்கள் பலவாயும், இருள் மலத்துள் மோகமுறும் பல்லுயிர்க்கும் - (மயக்கத்திற்கேதுவாயுள்ள) ஆணவ மலத்துள் (விருப்பமுற்று) மயக்கமடையும் எண்ணிறந்த உயிர்கட்கும், முத்தி அளித்தற்கு - முத்தியின்பத்தைக் கொடுத்தருளும் பொருட்டு, மலபாகம் உற - (உயிர்கள்) அவ்வாணவமலப் பற்றகன்று பரிபக்குவமுற்றபோது, கடைக்கண் பாலித்து - (அவ்வுயிர்களை) கடைக்கண் நோக்கியருளி, தேகம் உற தந்த - (அவ்வுயிர்கள்) உடலைப் பெறுமாறு கொடுத்த, அரு உருவம் சார்ந்த அருவமாகிய வடிவத்தைப் பொருந்திய, விந்து - சுத்த மாயையும், மோகினி - அசுத்த மாயையும், மான் - பிரகிருதி மாயையும் (என்பவற்றோடு), பெந்தம் உறவே பிணிப்பித்து - பாசம் பொருந்தும்படியாகச் சேர்ப்பித்து, மந்த்ரமுதல் ஆறு அத்துவாவும் - மந்திரம் முதலாகச் சொல்லப்பட்ட ஆறு வழிகளையும், அண்டத்து ஆர்ந்த அத்துவாக்களும் - (கீழேழுலகம் மேலேழுலகம் என்ற பதினான்கு) உலகத்திலுள்ள வழிகளையும், முற்கூறத்தகும் சிமிழ்ப்பில் கூட்டுவித்து - முன்னே தக்கபடி கூறப்பட்ட கட்டில் சேரும்படி செய்து, மாறிவரும் - மாறி மாறி வருகின்ற, ஈர் இரண்டு தோற்றத்து - நான்கு வகையான தோற்றத்தையுடைய, எழுபிறப்புள் - எழுவகைப் பிறப்புக்களுள், யோனி எண்பான் ஆரவந்த நான்கு நூறு

ஆயிரத்துள் - எண்பத்துநான்கு நூறாயிர யோனிபேதங் களையுடைய உயிர்களுள், தீர்வு அரிய - (அனுபவத்தா லன்றி) தீர்த்தற்கரிய, கன்மத்துக்கு ஈடாய் - (அவ்வுயிர் களின்) இருவினைகட்குத் தக்கவாறு, கறங்கும் சகடமும் போல் - காற்றாடியும் (வண்டிச்) சக்கரமும்போல, சென னித்து உழ்ல - பிறந்து உழலும்படி செய்து, திரோதித்து- பின் மறைத்து. எ - று.

(க—ரை) சிவபெருமான் ஆன்மாக்களின் வினைப்பய னுக்கேற்றவாறு பலவேறு பிறவிகளைக் கொடுத்துக் காற்றாடியும் வண்டியின் சக்கரமும்போல உழலச்செய்து பின் மறையும்படி செய்வார் என்க.

(வி—ரை) உரு - வடிவுடையது; பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசுரன் என்னும் நான்கும உருவத் திரு மேனியாம். அரு - வடிவில்லாதது; சிவம், சத்தி, நாதம், விந்து என்னும் நான்கும் அருவத் திருமேனியாம். அரு வுரு - வடிவும் வடிவில்லாததுமாயது; சதாசிவம் அருவுரு வத் திருமேனியாம். இவை முறையே சகளத் திருமேனி, நிட்களத் திருமேனி, சகளநிட்களத் திருமேனி யெனப் படும். இவ்வுருவம் நான்கு, அருவம் நான்கு, அருவுருவம் ஒன்று ஆகிய ஒன்பதையும் நவந்தருபேதமென்பர். அத் துவா - வழி. ஆறு அத்துவாக்களாவன: மந்திராத்துவா, பதாத்துவா, வன்ணத்துவா, புவனத்துவா, தத்துவாத் துவா, கலாத்துவா என்பன. ஈரிரண்டு தோற்றம் - நால் வகைத் தோற்றம். அவையாவன: அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்பன. அண்டசம்: முட்டையிற் தோன்றுவன; சுவேதசம்: வேர்வையிற் றோன்றுவன; உற்பிச்சம்: வித்து, வேர் முதலியவற்றிற் றோன்றுவன; சராயுசம்: கருப்பையிற் றோன்றுவன. எழுபிறப்பு—தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன என்பன. எண்பத்துநான்கு லட்சம் யோனிபேதங்களாவன:—ஊர்

வன 11, மனிதர் 9, நீர்வாழ்வன 10, பறவை 10, விலங்கு 10, தேவர் 14, தாவரம் 20 ஆக 84 லட்சம். இதனை

"ஊர்வ பதினொன்று மொன்பது மானிட
நீர்பறவை நாற்காலோர் பப்பத்தாஞ்—சீரிய
பந்தமாந் தேவர் பதினாலயன் படைத்த
அந்தமில்சீர்த் தாவரநா லைந்து"

எனவரும் வெண்பாவாலறிக.

சிவபெருமான் ஆன்மாக்களுக்குச் சொர்க்காதி போகங்கள் முதலியவற்றைக் கொடுத்துச் சத்திநிபாதம் தருதற்கேற்ற பக்குவகாலத்தை எதிர்நோக்கி அருள்புரிதல்

—வெங்கிரய

17 சொர்க்காதி போகம் எல்லாம் துய்ப்பித்துப் பக்குவத்
நற்காரணம்சிறி துநண்ணுதலும்,-தர்க்கம்இடும்[தால்
18 தொன்னூல் பரசமயந்தோறும் அதுஅதுவே
நன்னூல்எனத்தெரிந்துகாட்டுவித்து,-முன்னால்
19 விரதம்முதலாயபலமெய்த்தவத்தின்,உண்மைச்
சரியை, கிரியா, யோகம் சார்வித்து.—அருளபெ
20 சாலோக சாமீப சாரூபமும் புசிப்பித்து [ருகு
ஆலோகந்தன்னை அகற்றுவித்து—நால்வகையாம்
21 சத்திநி பாதம் தருதற்கு, இருவினையும்
ஒத்து வரும் காலம் உளஆகிப்,—பெத்த
22 மலபரிபாகம் வரும் அளவில் பன்னாள்
அலமருதல் கண்ணுற்று அருளி.

(இ-ள்) வெங்கிரய சொர்க்காதி போகம் எல்லாம் துய்ப்பித்து - கொடிய நரகம் சுவர்க்கம் முதலிய உலகங்களில் சகல போக இன்பங்களையும் ஊட்டுவித்து, பக்கு

வத்தால் - மலபரிபாகத்தால், நற்காரணம் சிறிது நண்ணுதலும் - முத்தியடைதற்குரிய நல்ல புண்ணியம் சிறிது வந்துசேர்தலும், தர்க்கம் இடும் தொல்நூல் பரசமயம் தோறும் - தங்கள் சமயமே சிறந்தது என்று தர்க்கமிடுதற்கு ஏதுவாக இயற்றப்பெற்றுள்ள பழைய நூல்களையுடைய புறச்சமயங்கள்தோறும், அது அதுவே நல்நூல் எனத் தெரிந்து - அந்தந்தச் சமயநூலே உண்மைநூல் என அறிந்து, நாட்டுவித்து - (அச்சமயத்தில்) அழுந்துமாறு செய்து, முன்னூல் பலவிரதம் முதலாய மெய்த்தவத்தின் - முதல்நூலாகிய வேதங்களில் கூறியுள்ள பலவித விரதங்கள் முதலியவற்றை உணமையாகச் செய்த தவத்தின்பயனாக, உண்மை - உண்மைநெறியை உணர்த்தும், சரியை கிரியை யோகம் சார்வித்து - சரியை கிரியை யோகம் என்னும் மூன்றையும் முறையே சேர்ப்பித்து, அருள் பெருகு - திருவருளைப் பெருக்குகின்ற, சாலோக சாமீப சாரூபமும் புசிப்பித்து - சாலோகம் சாமீபம் சாரூபம் என்னும் மூன்று பதமுத்திகளையும் அனுபவிக்கச் செய்து, ஆலோகந் தன்னை அகற்றுவித்து - அறியாமையை நீக்கி, நால்வகையாம் சத்திநிபாதம் - நால்வகைப்பட்ட சத்திநிபாதங்களைத், தருதற்கு - தருதற்கேதுவாகிய, இருவினையும் ஒத்துவருங் காலம் - (நல்வினை தீவினை என்கின்ற) இருவினையும் ஒத்துவருங் காலத்தில், உளவாகி - தோன்றி, பெத்த மலபரிபாகம் - பாசத்தைத் தருதற்கு மூலகாரணமான ஆணவமலம் அழிதற்குரிய பக்குவநிலை, வரும் அளவில் - வருங்காலத்தில், பன்னாள் அலமருதல் கண்ணுற்று-பலநாட்களாய்ச் சுழன்றுகொண்டிருத்தலை நோக்கி, அருளி - கருணைகூர்ந்து. எ - று.

(க—ரை) சிவபெருமான் சுவர்க்காதி போகங்களையெல்லாம் ஆன்மாக்களை அனுபவிக்கச்செய்து மனம் பரிபக்குவமடையும் காலத்தில் சத்திநிபாதம் பொருந்தும்படி தாம் கண்ணோக்கி அருள்புரிவர் என்க.

(வி—ரை) சமயவாதிகளெல்லாம் தம் சமயமே மெய்ச் சமயம் என்று வாதாடுவர். அதுபற்றியே "தர்க்கமிடுந் தொன்னூற் பரசமயம்" என்றார். உலகத்தில் பல சமயங்களிருந்தபோதிலும் அச்சமயத்தினர் செய்யும் வழிபாட்டிற்குக் கருணைபுரியும் இறைவன் ஒருவனேயாம். இதனை "ஆறுசமயங்கடொறும், வேறுவே, றாகிவிளையாடு, மூனை யாவ, ரறிவார்" என்னும் தாயுமான சுவாமிகள் திருவாக்காலறிக. இன்னும்,

"புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம
வறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத்
திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்"

என்னும் சிவஞானசித்தியார் திருவிருத்தத்தாலு மறிக. (சித்தி: சுபக்: செய். 263).

புறச்சமயம் — தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் என்பன.

அகச்சமயம் — பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்தவாதசைவம் ஈசுவரவவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம் என்பன. விரதம் என்பது இன்னவறஞ் செய்வலெனவும், இன்ன பாவம் ஒழிவலெனவும் தம்மாற்றலுக்கேற்ப வரைந்துகொள்வன. அஃதாவது மனம் பொறிவழி செல்லாது நிற்றற்பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றினலும் கடவுளைச் சிறப்பாக வழிபடுதல்.

தவம் என்பது மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு விரதங்களால் உண்டி சுருக்கலும், கோடைக் கண் வெயில்நிலே நிற்றலும், மாரியினும், பனியினும் நீர் நிலே நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு அவற் றல் தம்முயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுத்து இறைவனைத் தியானித்தல்.

சரியை என்பது பணிவிடை. சிவாலயத்திற்கும் சிவனடியாருக்கும் தொண்டு புரிதல். சரியை மார்க்கத்தை தாசமார்க்கம் என்பர். அதாவது அடிமைநெறி. இம் மார்க்கத்தில் நிற்பவர் சாலோகபதம் பெறுவர். சாலோக பதம் என்பது சிவபெருமானேடு ஒரே உலகத்தில் இருப் பது. இங்கு ஒருவர் வீட்டில் வேலைசெய்யும் ஒருவனுக்கு இருக்கும் உரிமைபோல எங்கும் தடையின்றி இயங்கிப் போகங்களை நுகர்ந்து வாழ்தலாம். இவற்றை "ஆவலா லெமக்காமலர் ஆக்கல்" என்னும் திருவாதவூரடிகள் புரா ணச் செய்யுளாலறிக.

கிரியை என்பது பூசை. சிவலிங்கப்பெருமானை அகத் தும் புறத்தும் வழிபடல். கிரியை மார்க்கத்தை புத்திர மார்க்கம் என்பர். அதாவது புத்திரநெறி. இம்மார்க்கத் தில் நிற்பவர் சாமீபபதம் பெறுவர். சாமீபபதம் என் பது சிவனுக்குச் சமீபத்தில் இருப்பது. இங்கு மைந் தர்க்கு இருக்கும் உரிமையைப்போல் இருந்து போக விசேடங்களை நுகர்ந்து வாழ்தலாம். இவற்றை, "கந்த வர்க்கமும் இளர்மணப் புகையும்" என்னும் திருவாத வூரடிகள் புராணச் செய்யுளாலறிக.

யோகம் என்பது மனத்தை ஐம்பொறிகளின்வழியே செல்லாவண்ணம் நிறுத்திச் சிவத்தைத் தியானித்தல். யோகமார்க்கத்தைச் சகமார்க்கம் என்பர். அதாவது தோழநெறி. இம்மார்க்கத்தில் நிற்பவர் சாரூபபதம் பெறு

வர். சாரூபபத மென்பது சிவன் திருவுருவத்தைப் பெற்றிருப்பது. இங்கு தோழர்க்கு இருக்கும் உரிமைபோல் விளங்கிப் போக நுகர்ச்சிகளைப் பெற்று வாழ்தலாம். இவற்றை, "முக்குணம் புலன் ஐந்துடன் அடக்கி" என்னும் திருவாதவூரடிகள் புராணச் செய்யுளாலறிக.

ஆலோகம் என்பதை அலோகம் என்பதன் விகாரமாகக் கொண்டு "ஆலோகந்தன்னை யகற்றுவித்து" என்பதற்கு அறியாமையை நீக்கி என்று பொருள் கூறப்பட்டது. இதற்கு தெளிந்த அறிவை விரிவடையச்செய்து என்று பொருள் கூறினும் அமையும். சத்தி நிபாதம்—சத்தி பதிதல் அல்லது அருள் பதிதல். இவை மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நான்குவகைப்படும். இருவினையொப்பு - நல்வினை தீவினைகளிலும் அவற்றின் வினையாகிய புண்ணிய பாவங்களிலும் இவற்றின் பயனாகிய இன்ப துன்பங்களிலும் ஒன்றில் விருப்பும் வெறுப்புமின்றி ஆன்ம அறிவின்கண் ஒப்ப வெறுப்பு நிகழ்தல். சரியை கிரியை யோக சிவபுண்ணியங்களினால் இருவினையொப்பும், இருவினையொப்பால் மலபரிபாகமும், இருவினையொப்பு மலபரிபாகங்களினால் சத்திநிபாதமும் உண்டாகும். "வினையொத்தபின், கணக்கிலாத் திருக்கோல நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே" என்பது திருவாசகம்.

சிவபெருமான் ஆன்மாக்களுக்குத் திருவருள்புரியக் குருமூர்த்தியாக எழுந்தருளுவர்

—உலவாது

23 அறிவுக்கு அறிவாகி, அவ்வறிவுக்கு எட்டா,
நெறியில் செறிந்தநிலை நீங்கிப்—பிறியாக்
24 கருணைத் திருஉருவாய்க்,காசினிக்கே தோன்றி
குருபரன் என்று ஓர்திருப்பேர் கொண்டு. [க்

(இ—ள்) உலவாது - கெடாத அறிவுக்கு அறிவாகி - ஆன்ம அறிவினுக்கறிவாகி, அவ்வறிவுக்கு எட்டா நெறியில் - அவ்வறிவுக்கு அறிய முடியாத வழியில், செறிந்த நிலை நீங்கி - எங்கும் நிறைந்த நிலையை விட்டு, பிறியாக் கருணை - (என்றும் விட்டுப்) பிரியாத அருளே, திருவுருவாய் - திருமேனியாக, குருபரன் என்று ஓர் திருப்பேர் கொண்டு - குருபரன் என்று சொல்லப்பட்ட ஒப்பற்ற ஒரு திருப்பெயர் பூண்டு, காசினிக்கே தோன்றி - உலகத்திலே தோன்றி எ - று.

(க—ரை) சிவபெருமான் மேலான ஞானநிலையிற் பொருந்தியவராயும் நீங்காத கருணையே திருவுருவமாகவுடையவராயும் உலகத்தில் குருமூர்த்தியென்று சொல்லும்படியான ஒப்பற்ற திருநாமத்தை யுடையவராயுமுடையவர் என்க.

(வி—ரை) உலகில் சிவபெருமானே மானிடச் சட்டை சாத்திக் குருபரனாய் எழுந்தருளி பக்குவ ஆன்மாக்களுக்கு அருள்புரிவரென்பது ஆகமநூற் றுணிபு. இவற்றை, "மன்னவன் தன்மகன் வேடரிடத்தே" என்னும் சிவஞானசித்தியார்ச்செய்யுளாலும், "ஐம்புலவேடரின் அயர்ந்தனை" என்னும் சிவஞானபோதச் சூத்திரத்தாலுமறிக.

சிவபெருமான் ஆன்மாக்களுக்குத் திருவருள் புரியும் முறை

—திருநோக்கால்

25 ஊழ்வினையைப் போக்கி உடல் அறுபத்து எட்டுநிலம்
ஏழும், அத்துவாக்கள் இருமூன்றும்,—பாழாக
26 ஆணவமான படலம் கிழித்து. அறிவில்
காணரிய மெய்ஞ்ஞானக்கண்காட்டிப்,—பூணும்

27 அடிஞானத்தால் பொருளும் ஆன்மாவும் காட்டி
கடியார்புவனம் முற்றும்காட்டி,—முடியாது [க,
28 தேக்கு பரமானந்தத் தெள்ளமுதம் ஆகி எங்கும்
நீக்கம் அற நின்ற நிலைகாட்டிப்—போக்கும்
29 வரவும் நினைப்பும் மறப்பும் பகலும்
இரவும் கடந்து உலவா இன்பம—மருவுவித்துக்
30 கன்மமலத்தார்க்கு மலர்க்கண்மூன்றும் தாழ்சடையும்
வன்மழுவும், மானுமுடன் மால்விடைமேல்-மின் இடத்
31 பூத்தபவளப் பொருப்புஒன்று வெள்ளிவெற்பில் [துப்
வாய்த்தனைய தெய்வ வடிவாகி—மூத்த
32 கருமமலக் கட்டறுத்துக் கண் அருள்செய்து உள்நின்
ஒருமலத்தார்க்கு இன்பம் உதவி, [று

(இ-ள்) திருநோக்கால் - திருவருட் பார்வையினால், ஊழ்வினையைப் போக்கி - சஞ்சிதவினையைப் போக்கி, உடல் அறுபத்தெட்டு - உடற்கருவிகள் அறுபத்தெட்டும், நிலம் ஏழும் - மூலாதாரம் முதலிய நிலங்கள் ஏழும், அத்துவாக்கள் இருமூன்றும் - மந்திராத்துவா முதலாகிய ஆறு அத்துவாக்களும், பாழ் ஆக - அழிந்தொழிய, ஆணவமான படலம் கிழித்து - ஆணவமலம் என்கின்ற திரையை நீக்கி, அறிவில் காணரிய - அறிவினால் காணுதற்கரிய, மெய்ஞானக் கண்காட்டி - மெய்ஞ்ஞானம் என்று சொல்லப்படுகின்ற ஞானநோக்கத்தைத் தந்தருளி, பூணும் - பொருந்திய, அடிஞானத்தால் - திருவடி ஞானத்தால், பொருளும் ஆன்மாவும் காட்டி - பதிப்பொருளையும் பசுப்பொருளையும் அறிவித்து, கடி ஆர் புவனம் முற்றும் காட்டி - காவல் நிறைந்த உலகமாகிய பாசப்பொருள் அனைத்தையும் அறியும்படி செய்து, முடியாது - அழியாமல், தேக்கு - எங்கும் நிறைந்த, பரமானந்தத் தெள் அமுதம் ஆகி - மேலான இன்பத்தைத் தருகின்ற தெளிந்த அமுதத்தை ஒத்து, எங்கும் நீக்கம அற -

எங்கும் நீங்குதல் இல்லாமல், நின்ற நிலைகாட்டி - நிற்கும் நிலையையும் அறிவித்து, போக்கும் வரவும் - போதலும் வருதலும், நினைப்பும் மறப்பும் - நினைத்தலும் மறத்தலும், பகலும் இரவும் கடந்து - பகலும் இரவும் கடந்து, உலவா இன்பம் மருவுவித்து - அழியாத பேரின்பத்தை அடைவித்து, கன்மமலத்தார்க்கு - பிரளயாகலர்க்கு, மலர்க்கண் மூன்றும் - தாமரைமலர்போன்ற கண்மூன்றும், தாழ்சடையும் - தொங்குகின்ற சடையும், வன்மழுவும் - வலிய மழுப்படையும், மானும் - மான்கன்றும், உட(ல)ல் மால்விடைமேல் - கோபிக்கின்ற திருமாலாகிய இடபத்தின்மீது, மின் இடத்துப் பூத்த - மின்னற்கொடி இடப்பக்கத்திலே தோன்றிய, பவளப் பொருப்பு ஒன்று - பவளமலை ஒன்று, வெள்ளி வெற்பில் வாய்த்தனைய - வெள்ளிமலையின்மீது தோன்றிஞலொத்த, தெய்வ வடிவு ஆகி - தெய்வத் திருமேனி கொண்டு, மூத்த - அநாதிகாலமாகத் தொடர்ந்த, கருமமலக் கட்டறுத்து - ஆணவம் கன்மம் என்ற கட்டுக்களைப் போக்கி, கண் அருள்செய்து - ஞானக்கண்ணைக் கொடுத்தருளி, ஒரு மலத்தார்க்கு - விஞ்ஞானகலர்க்கு, உள்நின்று - (அறிவுக்கறிவாகி) உள்நின்ற நிலையிலேயே, இன்பம் உதவி - பேரின்பத்தைக் கொடுத்தருளி. எ - று.

(க—ரை) சிவபெருமான் தனது அருட்பார்வையிஞல் ஆன்மாக்களுக்குற்ற ஊழ்வினையைப் போக்கிச் சரீரம் தோன்றுவதற்குக் காரணமாயுள்ளவற்றை அழியும்படி செய்தும், உண்மையான ஞானக்கண்ணைக் காண்பித்தும், பதி பசு பாசங்களனைத்தையும் காண்பித்தும், எக்காலமும் தான் நீக்கமற நிற்கின்ற நிலைமையைக் காண்பித்தும் பிறப்பிறப்பாகியவற்றைக் கடந்து என்றும் கெடாத இன்பத்தை அடையும்படி செய்தும் மூன்று கண்களுடனும் மழுப்படையுடனும் பெரிய இடபத்தின்மேல் இடப்பக்கத்திலே உமாதேவியார் பொருந்தும்படியாக வெள்ளி

யங்கிரியில் தெய்விகத் திருவுருவத்துடன் விளங்குவர் என்க.

(வி—ரை) திருநோக்கு - நயனதீக்ஷை; அருட்பார்வை. இது ஆசாரியர் தனது கிருபாநோக்கத்தால் சீடனது சஞ்சித வினையை அறுத்து அருள்புரிதல். ஊழ்வினை - சஞ்சிதவினை. உடல் அறுபத்தெட்டு - தூலதேகக் கருவிகள் அறுபதும் சூக்குமதேகக் கருவிகள் எட்டும் ஆக அறுபத்தெட்டு உடற்கருவிகள். நிலம் எழ் - மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை, துவாதசாந்தம் என்பன. படலம் - கண்ணொளியை மறைக்குமோரு நோய். "ஞானக் கண்காட்டி" என்று கூறுதலால் "படலம் கிழித்து" என்றார்.

சிவபெருமான் ஆன்மாக்களை அடிமைக்கொண்டு முத்தியடையச்செய்தல்

—பெருகியெழு

33 மூன்று அவத்தையும்கழற்றி முத்தருடனே இருத்தி
ஆன்ற பரமுத்தி அடைவித்துத் - தோன்றவரும்
34 யான் எனதென்று அற்ற இடமே திருஅடியா
மோன பரானந்த மூடியாக—ஞானம்
35 திருஉருவா இச்சை செயல் அறிவு கண்ணு
அருள் அதுவே செங்கை அலரா—இருநிலமே
36 சந்நிதியா, நிற்குந் தனிச்சுடரே! எவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே!

(இ—ள்) பெருகி எழும் - மிகுந்து தோன்றுகின்ற, மூன்று அவத்தையும் கழற்றி - கேவலாவத்தை, சகலாவத்தை, சுத்தாவத்தை என்னும் மூன்று அவத்தைகளையும் நீக்கி, முத்தருடனே இருத்தி - சீவன்முத்தர்களுடன்

சேர்த்து, ஆன்ற பரமுத்தி அடைவித்து - மேலாகச் சொல்லப்படுகின்ற பரமுத்தியை அடையப்பண்ணி, தோன்றவரும் - தோன்றும்படி வருகின்ற, யான் எனது என்று அற்ற இடமே - யான் எனது என நினைத்தல் நீங்கிய இடமே, திருவடியா(க) - திருவடியாகவும், மோன பரானந்தம் முடியாக - சிவானந்தத்தைத் தருகின்ற மௌனமே திருமுடியாகவும், ஞானமே திரு உரு ஆக - ஞானமே திருமேனியாகவும், இச்சை செயல் அறிவு கண்ணு - இச்சாசக்தி கிரியாசக்தி ஞானசக்தி என்னும் மூன்றுமே கண்களாகவும், அருள் அதுவே செங்கை அலர் ஆக - திருவருட்கருணையே சிவந்த கைமலராகவும், இருநிலமே சந்நிதியா - பெரிய பூவுலகமே சந்நிதானமாக வும், நிற்கும் தனிச்சுடரே - விளங்குகின்ற ஒப்பற்ற சோதியனே! எவ்வுயிர்க்கும் பின்னம் அற நின்ற பெருமானே - எவ்வுயிர்களிடத்திலும் வேற்றுமையற நின்ற பெருமையுடையவனே! எ - று.

(க—ரை) சிவபெருமான் உலகத்திலுள்ள எல்லாவுயிர்களுக்கும் வேறுபாடில்லாமல் விளங்குகின்ற பெருமையையுடையவராயும் ஆணவமலம் ஒன்றையேயுடைய விஞ்ஞானகலருக்கு இன்பமளித்து, கேவலாவத்தை, சகலாவத்தை, சுத்தாவத்தை என்னும் மூன்று அவத்தைகளையும் நீக்கி மேலான முத்திநிலையை அடையும்படி செய்பவராயு முள்ளவர் என்க.

(வி—ரை) அவத்தை - ஆன்மா தத்துவங்களோடு கூடிச் சகல விஷயங்களையும் அறிந்து பற்றி அனுபவிக்கின்ற நிலை. அவை கேவலாவத்தை, சகலாவத்தை, சுத்தாவத்தை என மூன்று வகைப்படும். கேவலாவத்தை என்பது ஆன்மா ஆணவமலத்தோடு கூடி இச்சாஞானக் கிரியைகள் சிறிதும் விளக்கமுறாது கிடக்கும் நிலை. சகலாவத்தை என்பது ஆன்மா தனுகரணங்கள் முதலிய

வற்றைப் பெற்று இச்சாஞானக் கிரியைகள் சிறிது விளக்க முற்றிருக்கும் நிலை. சுத்தாவத்தை என்பது பஞ்சமலங் களும் பிறவியும் நீங்கி ஆன்மா வியாபக அறிவு எய்தி யிருக்கும் நிலை. இவற்றை,

"கேவல சகல சுத்தம் என்றுமூன் றவத்தை யான்மா
மேவுவன்கேவலந்தன் னுண்மைமெய்பொறிகளெல்லாம்
காவலன் கொடுத்த போது சகலனு மலங்க ளெல்லாம்
ஓவின போது சுத்த முடையன்உற் பவந் துடைத்தே"

என்னும் சிவஞானசித்தியார்ச் செய்யுளாலறிக (சித். 227). முத்தர் - சீவன்முத்தர்; மெய்ஞானம் தலைப்பட மலக்குற் றம் நீங்கிப் பிறவிக்கிடமின்றியிருப்பவர் சீவன்முத்தர் எனப்படுவர். பரமுத்தி - மேலான முத்தி.

யான் என்பது அகங்காரம் அல்லது செருக்கு என் னும் அகப்பற்று. எனது என்பது மமகாரம் அல்லது ஆசை என்னும் புறப்பற்று.

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்" என்பது திருக்குறள். (கு. 346).

"பின்னமற நின்ற பெருமானே" என்றது இறைவன் உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்கும் சுத்தாத்துவித நிலையை. ஒன்றாய் நிற்றலாவது உடலும் உயிரும்போல் நிற்றல். வேறாய் நிற்றலாவது கண்ணொளி யும் கதிரொளியும்போல் நிற்றல். உடனாய் நிற்றலாவது கண்ணொளியும் ஆன்ம அறிவும்போல் நிற்றல்.

முருகப்பெருமானின் சொரூப நிலை

—மின் னுருவம்

37 தோய்ந்தநவரத்நச் சுடர்மணியாற் செய்தபைம்பொன்
வாய்ந்த கிரண மணிமுடியும்—தேய்ந்தபிறைத்

38 துண்டம்இருமூன்று நிரைதோன்றப் பதித்துஅனைய
புண்டரம் பூத்தநுதல் பொட்டழகும்—விண்ட
39 பருவமலர்ப்புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்கு
அருள்பொழியுங் கண்மலர் ஈராறும்—பரிதி
40 பலவும் எழுந்து சுடர் பாலித்தால் போலக்
குலவும் மகரக் குழையும்—நிலவு உமிழும்
41 புன்முறுவல் பூத்து அலர்ந்த பூங்குமுதச்செவ்வாயும்
சென்ம விடாய் தீர்க்கும் திருமொழியும்.

(இ—ள்) மின் உருவம் தோய்ந்த - ஒளிவடிவம் பொருந்திய, நவரத்தினச் சுடர்மணியால் செய்த பைம்பொன் வாய்ந்த - ஒன்பது இரத்னங்களாகிய ஒளியுள்ள மணிகளோடு பசும்பொன்னாற் செய்யப்பட்ட, கிரண மணிமுடியும் - பிரகாசத்தைத் தரும் அழகிய ஆறு திருமுடிகளையும், தேய்ந்த பிறைத்துண்டம் இருமூன்று - தேய்ந்த மதியாகிய ஆறுபிறைத் துண்டங்களை, நிறைதோன்றப் பதித்தனைய - வரிசையாக விளங்கும்படி பதித்தாற்போன்ற, புண்டரம் பூத்தநுதல் பொட்டு அழகும் - திரிபுண்டரம் தோன்றி விளங்குகின்ற நெற்றிகளில் இட்டபொட்டுகளின் அழகினையும், விண்ட பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்கு - பருவகாலத்தில் விரிந்த பன்னிரண்டு செந்தாமரை மலர்கள் பூத்தாற்போல, அருள்பொழியும் கண்மலர் ஈராறும் - திருவருளைப் பொழிகின்ற கண்மலர் பன்னிரண்டினையும், பருதி பலவும் எழுந்து சுடர் பாலித்தாற்போல - சூரியர் பன்னிருவரும் தோன்றி ஒளிவீசினாற்போல, குலவு மகரக் குழையும் - விளங்குகின்ற மகர குண்டலங்களையும், நிலவு உமிழும் - ஒளி வீசுகின்ற, புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயும் - புன்சிரிப்புத் தோன்ற மலர்ந்த செவ்வாம்பல்போன்ற சிவந்த வாய்களையும், சென்மவிடாய் தீர்க்கும் திருமொழியும் - பிறவித் துன்பத்தை நீக்குகின்ற திருவாக்கினையும் எ—று.

(க—ரை) முருகப்பெருமான் பிரகாசத்தைத் தரும் நவரத்தினங்களாற் செய்து விளங்குகின்ற ஆறு திருமுடிகளையுடையவராயும், திரிபுண்டரம் விளங்குகின்ற நெற்றிகளிற் பொட்டுக்களை யுடையவராயும், பன்னிரண்டு சூரியர்களும் தோன்றினாற்போல விளங்குகின்ற பன்னிரண்டு கண்களையுடையவராயும் அழகுள்ள மகரகுண்டலங்களை அணிந்தவராயும், செவ்வாம்பல் மலரினையொத்த சிவந்த வாய்களையுடையவராயும் ஆன்மாக்களது பிறவித்துன்பத்தை நீக்கும் திருவாக்கை யுடையவராயும் விளங்குவர் என்க.

(வி—ரை) நவரத்நம் - ஒன்பது ரத்தினம். அவை மரகதம், பவளம், நீலம், வச்சிரம், பதுமராகம், முத்து, கோமேதகம், புட்பராகம், வயிடூரியம் என்பன. பருதிபல - பன்னிரண்டு சூரியர். மகரக்குழை - மகரமீன் வடிவாகச் செய்யப்பட்ட ஒருவகைக் காதணி.

முருகக் கடவுளுடைய திருமுகங்களின் செயல்கள்

—வின்மலிதோள்

42 வெவ் அசுரர் போற்றிசைக்கும் வெம்சூரனைத்தடிந்து
தெவ்வர்உயிர்சிந்தும்திருமுகமும்-எவ்வுயிர்க்கும்
43 ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப
வாழ்வுதருஞ் செய்ய மலர்முகமும்—சூழ்வோர்
44 வடிக்கும் பழமறைகள் ஆகமங்களியாவும்
முடிக்கும் கமல முகமும்—விடுத்து அகலாப்
45 பாச இருள் துறந்து பல்கதிரில் சோதிவிடும்
வாசமலர் வதன மண்டலமும்—நேசமுடன்
46 போகம்உறும்வள்ளிக்கும்,புத்தேளிர்பூங்கொடி[க்கும்]
மோகம் அளிக்கும் முகமதியும்-தாகமுடன்
47 வந்து அடியில் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்
தந்து அருளும் தெய்வமுகத் தாமரையும்

(இ-ள்) வின்மலிதோள் - விற்படைதாங்கிய தோள்களையுடைய, வெவ்வசுரர் போற்றிசைக்கும் - கொடிய அசுரர்கள் போற்றித் துதிக்கின்ற, வெம்சூரனைத் தடிந்து - கொடிய சூரபத்மனைக் கொன்று, தெவ்வர் உயிர் சிந்தும் திருமுகமும் - மற்றும் பகைவர்களுடைய உயிரைஅளித்த திருமுகமொன்றும், எவவுயிர்க்கும் - எல்லா உயிர்கட்கும், ஊழ்வினையை மாற்றி - பழைய வினைகளைப் போக்கி, உலவாதபேரின்ப வாழ்வுதரும் - என்றும் அழியாதபேரின்பப் பெருவாழ்வைத் தருகின்ற, செய்ய மலர்முகமும் - செந்தாமரை மலர்போன்ற திருமுகமொன்றும், சூழ்வோர் வடிக்கும் -(தம்மை) அடைந்தோர் கற்றுத் தெளிகின்ற,பழமறைகள் ஆகமங்கள் யாவும் - பழைய வேதங்கள் சிவாகமங்கள் எல்லாவற்றையும், முடிக்கும் கமலமுகமும் - முடிவுறக் கூறுகின்ற தாமரை மலர்போன்ற திருமுக மொன்றும், விடுத்து அகலாப் பாச அருள் துறந்து - (உயிர்களை) விட்டுநீங்காத ஆணவமலமாகிய இருளைப் போக்கி, பல் கதிரில் சோதிவிடும் - பல சூரியர்களைப் போன்ற ஒலிவீசுகின்ற, வாசமலர் வதன மண்டலமும் - வாசனை வீசுகின்ற தாமரை மலர்போன்ற வட்டமான திருமுகமொன்றும், நேசமுடன் - அன்புடன், போகம் உறும் வள்ளிக்கும் - இன்பத்தை அனுபவிக்கின்ற வள்ளிநாயகியாருக்கும், புத்தேளிர் பூங்கொடிக்கும் - தெய்வப் பெண்ணாகிய பூங்கொடிபோன்ற தெய்வயானை அம்மையாருக்கும், மோகமளிக்கும் முகமதியும் - ஆசையைக் கொடுக்கின்ற சந்திரன்போன்ற திருமுகமொன்றும், தாகமுடன் வந்து அடியில் சேர்ந்தோர் - (தமது அருளைப் பெறும் பொருட்டு) ஆசையோடு திருவடிகளில் வந்தடைந்தோர், மகிழ - மகிழும்படியாக, வரம்பலவும் தந்து அருளும் - வரங்கள் பலவற்றையும் தந்து அருளுகின்ற, தெய்வ முகத் தாமரையும் - தெய்வத்தன்மை பொருந்திய தாமரை மலர்போன்ற திருமுகமொன்றும். எ-று.

(க—ரை) முருகப்பெருமானின் ஆறு திருமுகங்களின் செயல்களை இக்கண்ணிகளிற் கூறப்பட்டவையாகுமென்க.

(வி—ரை) ஊழ்வினை - முன்செய்தவினை; பிறவிக்குக் காரணமான சஞ்சிதவினை. பழமறைகள் - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்கள். ஆகமங்கள் - காமிகம் முதலாய இருபத்தெட்டுச் சிவாகமங்கள்.

இக்கண்ணிகளிற் கூறப்பட்ட திருமுகங்களின் செயல்கள்.

"மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரித்தன் றொருமுக மொருமுகம்
ஆர்வல ரேத்த வமர்ந்தினி தொழுகிக்
காதலி னுவந்து வரங்கொடுத் தன்றே யொருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வியோர்க் கும்மே யொருமுகம்
எஞ்சிய பொருள்களை யேமுற நாடித்
திங்கள்போலத் திசைவிளக்கும்மே யொருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக்
கறுவுகொ ணெஞ்சமொடு களம்வேட்டன்றேயொரு
குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின் [முகம்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே."

என்னும் திருமுருகாற்றுப்படை வரிகளைத் தழுவிக் கூறப்பட்டன.

முருகப்பெருமானுடைய திருக்கரங்களின் செயல்கள்

—கொந்தவிழ்ந்த

48 வேரிக் கடம்பும் விரைக்குரவும் பூத்து அலர்ந்த
பாரப் புயசயிலம் பன்னிரண்டும்—ஆர் அமுதம்
49 தேவர்க்கு உதவும் திருக்கரமும், சூர்மகளிர்
மேவக்குழைந்து அணைந்தமென் கரமும்—ஓவாது

50 மாரி பொழிந்த மலர்க்கரமும், பூந்தொடையல்
சேர அணிந்த திருக்கரமும்,—மார்பு அகத்தில்,
51 வைத்த கரதலமும், வாமமருங்கில் கரமும்
உய்த்த குறங்கில் ஒருகரமும்,—மொய்த்த
52 சிறுதொடி சேர்கையும், மணிசேர்ந்த தடம கையும்
கறுவுசமர் அங்குசம்சேர் கையும்,—தெறுபோர்
53 அதிர் கேடகம்சுழற்றும் அங்கைத் தலமும்,
கதிர்வாள் விதிர்க்கும் கரமும்,

(இ-ள்) கொந்து அவிழ்ந்த - கொத்தாக மலர்ந்த, வேரிக் கடம்பும் - தேனையுடைய கடப்ப மலரும், விரைக் குரவும் - வாசனையுடைய குரா மலரும், பூத்து அலர்ந்த - மலர்ந்து விளங்குகின்ற, பாரப்புரசயிலம் பன்னிரண்டும் - பெரிய மலைபோன்ற பன்னிரண்டு தோள்களையும், ஆர் அமுதம் - தெவிட்டாத அமுதத்தை, தேவர்க்கு உதவும் திருக்கரமும் - தேவர்களுக்குக் கொடுக்கின்ற திருக்கரம் ஒன்றும், சூர்மகளிர் மேவகுழைந்து அணைந்த மென்கரமும் - தேவப் பெண்கள் விரும்ப இளகித்தழுவிய மென்மையான திருக்கரம் ஒன்றும், ஓவாதுமாரி பொழிந்த மலர்க்கரமும் - இடைவிடாமல் மழை பெய்வித்தருளுகின்ற தாமரை மலர்போன்ற திருக்கரமொன்றும், பூந்தொடையல்சேர அணிந்த திருக்கரமும், - பூமாலைகள் ஒருங்குசேர அணிந்த திருக்கரமொன்றும், மார்பு அகத்தில் வைத்த கரதலமும் - மார்பின்மீது வைத்துக்கொண்டிருக்கும் திருக் கரமொன்றும், வாமமருங்கில் கரமும் - இடையின் இடப் பக்கத்தில் வைத்தருளிய திருக்கரமொன்றும், குறங்கில் உய்த்த ஒருகரமும் - துடையின்மேல் வைத்தருளிய ஒப் பற்ற திருக்கரமொன்றும், மொய்த்த சிறுதொடிசேர்கையும் - சூழ்ந்த சிறிய வீரவளைகள் அணிந்த திருக்கரமொன் றும், மணிசேர் தடங்கையும் - உருத்திராக்கமணி பொருந்

திய விசாலமான திருக்கரமொன்றும், கறவு சமர் அங்குசம் சேர்கையும் - கோபத்துடன் போர்செய்தற்கு துறட்டி என்னும் படையினைத் தாங்கிய திருக்கரமொன்றும், தெறு போர் அதிர் கேடகம் சுழற்றும் அம்கைத்தலமும் - அழிக்கின்ற போரில் அதிருகின்ற கேடகம் என்னும் ஆயுதத்தைச் சுழற்றுகின்ற திருக்கரமொன்றும், கதிர்வாள் விதிர்க்கும் கரமும் - ஒளிபொருந்திய வாட்படையினை வீசுகின்ற திருக்கரமொன்றும் எ—று,

(க—ரை) முருகப்பெருமானின் பன்னிரண்டு திருக்கரங்களின் செய்கைகளே இக்கண்ணிகளிற் கூறப்பட்டிருக்கின்றன வென்க.

(வி—ரை) வேரி - தேன், மணம். சூர்மகளிர் - அஞ்சத்தக்க தெய்வப் பெண்கள். வாமம் - இடப்பக்கம். "மொய்த்த சிறுதொடிசேர்" என்ற பாடத்திற்கு மொய்த்த சிறு துடிசேர் என்று கொண்டு வலிய சிறிய உடுக்கை பொருந்திய என்று பொருள் கூறுவாருமுளர். துடி - உடுக்கை, இடைசுருங்கிய ஒருவகைத் தோற்பறை. தொடி - வீரவளை. மணி - உருத்திராக்க மணி. கறுவு - தணியாக் கோபம். கேடகம் - பாதுகாப்புப் படை. (Shield.)

இக்கண்ணிகளிற் கூறப்பட்ட திருக் கரங்களின் செயல்கள்.

"விண்செலன் மரபி னையர்க்கேந்திய
தொருகை யுக்கஞ் சேர்த்திய தொருகை
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை யசைஇய
அங்குசங் கடாவ வொருகை யிருகை [தொருகை
ஐயிரு வட்டமொ டெஃகுவலந் திரிப்ப,
வொருகை மார்பொடு விளங்க வொருகை
தாரொடு பொலிய வொருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்பவொருகை
பாடின் படுமணி யிரட்ட வொருகை,
நீனிற விசும்பின் மலிதுளி பொழிய வொருகை

வானர மகளிர்க்கு வதுவை சூட்ட
ஆங்கப், பன்னிருகையும் பாற்படவியற்றி"

என்னும் திருமுருகாற்றுப்படை வரிகளைத் தழுவி எழுதப் பட்டன.

முருகப்பெருமானின் அலங்காரம்.

—முதிராத
54 கும்பமுலைச்செவ்வாய்க்கொடியிடையார்வேட்டு அணைந்த
அம்பொன் மணிப்பூண், அகல்மார்பும்,-பைம்பொற்
55 புரிநூலும், கண்டிகையும், பூம்பட்டு உடையும்,
அரைஞாணும், கச்சை யழகும்,—திரு அரையும்,
56 நாதக் கழலும் நகுமணிப்பொன் கிண்கிணியும்,
பாதத்து அணிந்த பரிபுரமும்,—சோதி
57 இளம்பருதி நூறு ஆயிரங்கோடி போல
வளந்தருதெய்வீக வடிவும்—உளந்தனில் கண்டு
58 ஆதரிப்போர்க்குஆருயிராய்அன்பர்அகத்தாமரையின்
மீது இருக்கும் தெய்வ விளக்கு ஒளியே.

(இ-ள்) முதிராத - இளமையாகவுள்ள கும்பமுலை குடம்போன்ற தனங்களையும், செவ்வாய் - சிவந்த வாயையும், கொடி இடையார் - கொடிபோலத் துவளுகின்ற இடையையுமுடைய தேவமகளிர், வேட்டு அணைந்த - விரும்பித் தழுவிய, அம்பொன் மணிபூண் அகல்மார்பும்- அழகிய பொன்னினாலும், இரத்தினங்களினாலும் செய்யப்பட்ட ஆபரணங்களை அணிந்த அகன்ற மார்பினையும், பைம்பொன் புரிநூலும் - பசிய பொன்னினாற் செய்யப்பட்ட பூணூலினையும், கண்டிகையும் - உருத்திராக்க மாலையினையும் பூம்பட்டு உடையும் - மலர்போலும் (மிருதுவான) பட்டாடையினையும், அரைஞாணும் - அரைஞாணையும், கச்சை அழகும்-அரைக் கச்சையின் அழகையும், திரு அரையும் அழகிய இடையையும், நாதக்கழலும் - ஒலிக்கின்ற வீரக் கழலினையும், நகுமணிப்பொன் கிண்கிணியும் - விளங்குகின்ற இரத்தி

னங்கள் பதித்த பொன்னுற் செய்யப்பட்ட சதங்கையினை யும், பாதத்து அணிந்த பரிபுரமும் - இருப்பாதங்களில் அணிந்த சிலம்பினையும், சோதி - ஒளி வீசுகின்ற நூறு ஆயிரம்கோடி இளம்பருதிபோல - இலட்சம்கோடி உதய சூரியர்கள் தோன்றினற்போல, வளர்தரு தெய்வீக வடி வும் - பெருமையைத் தருகின்ற தெய்வத்தன்மை பொ ருந்திய திருவுருவத்தையும், உளந்தனில் கண்டு - மனத் திற் கண்டு, ஆதரிப்போர்க்கு ஆர் உயிர் ஆய் - அன்பு செய்வோர்க்கு அருமையான உயிராய், அன்பர் அகத் தாமரையின்மீது இருக்கும் - அன்பர்களுடைய இதய கம லத்தில் எழுந்தருளியிருக்கும், தெய்வ விளக்கொளியே - தெய்வத்தன்மை பொருந்திய விளக்கொளிபோன்றவனே. எ—று.

(க—ரை) முருகப்பெருமானது ஆடையாபரணங்களைப் பற்றிய அலங்காரங்கள் இக்கண்ணிகளில் கூறப்பட்டிருக் கின்றன வென்க.

(வி—ரை) பூம்பட்டு என்பதற்கு பூத்தொழில் அமைந்த பட்டு என்று கூறினும் அமையும். அரைஞாண் - இடுப் பில் கட்டும் கயிறு. கிண்கிணி - கிண் கிண் என்று ஒலிக் கும் சதங்கை, ஒருவகைக் காலணி. பரிபுரம் - சிலம்பு.

முருகப்பெருமான் பற்பல உருவங்களாய் விளங்கும் நிலை.

—ஓதிய ஐந்து

59 ஓங்காரத்து உள்ஒளிக்கும் உள் ஒளியாய் ஐந்தொ
நீங்காத பேருருவாய் நின்றேனே—தாங்கரிய [ழிற்கும்

60 மந்திரமே சோரியா, வான்பதமே மாமுடியாத்
தொநாந்தமுறும் வன்னமே தொக்காகப்—பந்தனையால்

61 ஒத்த புவனத்து உருவே உரோமமாத்,
தத்துவங்களே சத்த தாதுவா,—வைத்த

62 கலையே அவயவமாக் காட்டும் அத்துவாவின்
நிலையே வடிவமா நின்றோய்!—பலகோடி
63 அண்டம் உருவாகி அங்கம் சராசரமாய்
கண்டசத்தி மூன்றுள் கரணமாய்—தொண்டுபடு
64 ஆவிப் புலனுக்கு அறிவுஅளிப்பஐந்தொழிலும்
மேவித் தனிநடத்தும் எங்கோவே!—மேவ
65 வரும் அட்டமூர்த்தமாம் வாழ்வே! மெய்ஞானம்
தரும் அட்டயோகத் தவமே!

(இ-ள்) ஓதிய -(மெய்யறிவுடையோரால்) சொல்லப் பட்ட ஐந்து ஓங்காரத்து - ஐந்து உறுப்புக்களையுடைய பிரணவமந்திரத்தின், உள்ஒளிக்கும் உள் ஒளியாய் - உள்ளொளிக்கும் உள்ளொளியாய், ஐந்தொழிற்கும் நீங்காத - சிருஷ்டி முதலிய பஞ்சகிருத்தியங்களுக்கும் அகலாத பேர் உருவாய் நின்றோனே -பெரிய வடிவுடையவனாய் நின்றோனே, தாங்கு அரிய - தாங்குதற்கு அரிய, மந்திரமே (சோரியா - மந்திராத்துவாவே இரத்தமாகவும், வான்பதமே மாமுடியா - பெருமைபொருந்திய பதாத்துவாவே பெரிய திருவடியாகவும், தொந்தமுறும் வன்னமே தொக்காக - கட்டுள்ளவன்னத்துவாவே தோலாகவும், பந்தனையால் ஒத்த புவனத்து உருவே உரோமமாக - பாசத்தொடு கட்டிய புவனத்துவாவே உரோமமாகவும், தத்துவங்களே சத்ததாதுவா - தத்துவாத்துவாவே எழுவகைத் தாதுக்களாகவும், வைத்தகலையே அவயவமாக - பொருந்திய கலாத்துவாவே ஏனைய உறுப்புக்களாகவும், காட்டும் அத்துவாவின் நிலையே வடிவமா நின்றோய் - காட்டிய அத்துவாக்களின் நிலையே வடிவமாக நின்றவனே, பலகோடி அண்டம் உருவாகி - பலகோடி அண்டங்களே திருமேனியாகவும், சராசரம் அங்கமாய் - சராசரப் பொருட்களே உறுப்புக்களாகியும், கண்ட (மெய்யறிவுடையோரால்) காணப்பட்ட, சத்தி மூன்றுள் கரணமாய் - (இச்சாஞானக் கிரியாசத்திகளென்னும்) மூன்று சத்திகளே அந்தக் கரணங்களாகவும்

(கொண்டு) தொண்டுபடும் - அடிமைத்தன்மை பொருந்திய, ஆவிப் புலனுக்கு அறிவு அளிப்ப - உயிர்களினது அறிவுக்கறிவாய் நின்று உணர்த்தும்பொருட்டு, ஐந்தொழிலும் ஏவி நிற்கும் - ஐந்து கிரியைகளை ஏவிச் சிறப்பாகச் செய்கின்ற, எம்கோவே - எம்முடைய தலைவனே! மேவவரும் அட்டமூர்த்தமாம் வாழ்வே - பொருந்தும்படியாக வருகின்ற எட்டுவடிவோடு வாழ்கின்ற பெருமானே, மெய்ஞானம் தரும் - உண்மை ஞானத்தைத் தருகின்ற, அட்டயோகத் தவமே - இயமம் முதலிய எட்டு அங்கங்களையுடைய யோகமாகிய தவத்தின் பயனே! எ-று.

(க—ரை) முருகப்பெருமானவர் படைப்பாகிய ஐந்து கிருத்தியங்களுக்கும் தான் வேறாகாமல் விளங்குபவராகியும், மந்திராத்துவா, பதாத்துவா, வன்னத்துவா, புவனத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா முதலிய ஆறு அத்துவாக்களின் வடிவமாகியும் அடிமையாகிய உயிர்த்தோற்றங்களுக்கு ஞானத்தைத் தருபவராகியும், பிருதுவி, அபபு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், இயமானன் என்று சொல்லப்பட்ட அட்டமூர்த்தங்களாகியும் விளங்குபவர் என்க.

(வி—ரை) ஐந்து ஓங்காரம் - ஐந்து உறுப்புக்களையுடைய பிரணவ மந்திரம். அவை யாவன. அகாரம், உகாரம், மகாரம், நாதம், விந்து என்பன. இவற்றை "அகர வுகர மகரவிந்து, நாதமாகிய வக்கரமைந்து" (சிவஞான தீபம் 122) என்பவற்றாலறிக. இவ்வைந்தக்கரங்களும் மந்திரங்களுக்கெல்லாம் தலைமையுற்று விளங்கும் 'நமசிவாய' என்னும் சிவமூலமந்திரமெனப்படும். இங்கு சிவபெருமானும் முருகப்பெருமானும் வேறல்லராகலின் இவ்வாறு கூறப்பட்டது. சத்ததாது . ஏழுதாது; அவை இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, நரம்பு, என்பு, தோல் என்பன.

சிவபெருமானுக்குரிய இலக்கணங்களை முருகக்கடவுள் மேலேற்றிக்கூறியது, அவர்களிருவர்க்கும் உள்ள பேதமின்மையைக் காட்டுவதற்கென்க.

சடாத்துவாக்களை முருகக் கடவுளுக்கு வடிவாகக் கூறியது அவற்றோடு ஒன்றாகியும் வேறாகியும் உடனாகியும் நிற்கும் அத்துவித இயைபுநோக்கி யென்க. அட்டமூர்த்தம் - எட்டுருவோடு கூடிய வடிவம். அவையாவன பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், இயமானன் என்பன. இவற்றை,

"தீவளி விசும்பு நிலனீ ரைந்து
ஞாயிறுந் திங்களு மறனு" (பரி 3-45) என்னும்

பரிபாடல் செய்யுளால் அறிக. ஈசற்கு அட்ட மூர்த்தங்கள் உள என்பதை "அட்டமூர்த்தி தன்வெண்காடடை நெஞ்சே," "அட்டமூர்த்தி அண்ணாமலை கைதொழக், கெட்டுப்போம் வினைகேடில்லை நெஞ்சமே" என்னும் தேவாரங்களாலறிக, அட்டயோகம் - எட்டுவகையான யோகமுறை. அவை இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்திகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன.

முருகப்பெருமானின் தசாங்கம்

—பருவத்து

66 அகலாத பேர் அன்பு அடைந்தோர் அகத்துள்
புகலாகும் இன்பப் பொருப்பும்—சுகலளிதப்
67 பேரின்ப வெள்ளப் பெருக்காறும் மீதானம்
தேரின்பம் நல்கும் திருநாடும்—பாரின்பம்
68 எல்லாங் கடந்த இருநிலத்துள் போக்குவரவு
அல்லாதுஉயர்ந்த அணிநகரும்—தொல்லுலகில்
69 ஈறும்முதலும்அகன் றுஎங்கும்நிறைந்துஐந்தெழு
கூறி நடாத்தும் குரகதமும்—ஏறுமதம் [த்தைக்

70 தோய்ந்து களித்தோர் துதிக்கையினால் பஞ்சமலம்
காய்ந்த சிவஞானக் கடாக்களிறும்—வாய்ந்தசிவ
71 பூரணத்துள் பூரணமாம் போதப் புதுமலராம்
நாரகத்துள்கட்டும் நறுந்தொடையும்—காரணத்துள்
72 ஐந்தொழிலும்ஓவாது அளித்து உயர்ந்த வான்கொ
வந்தநவ நாத மணிமுரசும்—சந்ததமும் [டியும்
73 நீக்கம் இன்றி ஆடிநிழல் அசைப்பான்போல்புவனம்
ஆக்கிஅசைத்தருளும் ஆணையும்-தேக்கமழ்ந்து
74 வீசும் பனுவல் விபுதர் தனித்தனியே
பேசும் தசாங்கமெனப் பெற்றோனே!

(இ-ள்) பருவத்து - பக்குவகாலத்தில், அகலாத பேர் அன்பு அடைந்தோர் அகத்துள் - நீங்காத பேரன்பை யுடையவர்கள் உள்ளத்தில், புகல் ஆகும் இன்பப்பொருப்பும் - புகுதற்குரிய ஆனந்த மலையும் சுகலளிதம் - நல்ல அழகுபொருந்திய, பேரின்ப வெள்ளப்பெருக்காறும் - பேரின்ப வெள்ளமாகிய ஆறும், மீதானம் - மேலான இடத்தில், தேர் இன்பம் நல்கும் திருநாடும் - தெளிந்த இன்பத்தைத் தருகின்ற அழகிய நாடும், பார் இன்பம் எல்லாம் கடந்த - உலக இன்பங்கள் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட இருநிலத்துள் - மேலான வீட்டுலகத்தி னிடத்தே போக்கு வரவு அல்லாது உயர்ந்த அணி நகரும் - போதலும் வருதலுமில்லாது உயர்ந்து விளங்கும் அழகிய நகரமும், தொல்லுலகில் - பழமையான உலகத்தில், ஈறும் முதலும் அகன்று - அந்தமும் ஆதியும் நீங்கி, எங்கும் நிறைந்து - எல்லாவிடத்திலும் வியாபித்து, ஐந் தெழுத்தைக் கூறி நடாத்தும் குரகதமும்-ஐந்து அட்சரங் களை (ஸ்ரீ பஞ்சாட்சரத்தை) ஓதிச்செலுத்துகின்ற குதிரை யும், ஏறுமதம் தோய்ந்து களித்தோர் - (பழமையாக) அமைந்துள்ள சமயங்களில் அருந்தி (அதுவே மெய்ச் சமயமெனக் கண்டு) மகிழ்ச்சியடைந்தோர்கள், துதிக்கை

யினால் - (அச்சமயங்களையெல்லாம் கடந்துநின்ற தன்னைத்) தோத்திரம் செய்வதினால், பஞ்சமலம் காய்ந்த சிவஞானக் கடாக்களிறும் - ஐந்து மலங்களையும் நீக்கிய சிவஞானமாகிய மதயானையும், வாய்ந்தசிவ பூரணத்துள் பூரணம் ஆம்-பொருந்திய சிவவியாபகத்துள் அழுந்திய, போதம் புது மலர் ஆ(க) - ஞானமே புதிய பூவாகக்கொண்டு, நாரகத்துள் கட்டும் நறுந்தொடையும் - அன்புநிறைந்த உள்ளத்திலே கட்டப்படுகின்ற நல்லமாலையும், காரணத்துள் ஐந்தொழிலும் - (தூல ஐந்தொழிலுக்குக்) காரணமாகிய (சூக்கும) ஐந்தொழிலையும், ஓவாது அளித்து உயர்ந்த வான்கொடியும் - இடைவிடாது செய்து உயர்த்திய மேலாகிய கொடியும், வந்த நவநாத மணிமுரசும் - தோன்றிய புதுமையைத் தருகின்ற நாத தத்துவமாகிய அழகிய முரசும், சந்ததமும் - எப்பொழுதும், நீக்கமின்றி - நீங்குதலின்றி, ஆடி நிழல் அசைப்பான்போல் - கண்ணாடிநிழலை அசைப்பவனைப்போல, புவனம் ஆக்கி அசைத்தருளும் ஆணையும், - (சகல) புவனங்களையும் தோற்றுவித்து இயங்கச்செய்கின்ற ஆட்சியும், தேக்கமழ்ந்து வீசும் பனுவல் - இனிமைபொருந்தி விளங்குகின்ற நூல்களை, விபுதர் தனித்தனியே பேசும் - புலவர்கள் வேறுவேறாகச் சொல்லும், தசாங்கம் எனப்பெற்றோனே - பத்துச் சிறந்தஉறுப்புக்களையுடையவன் என்று கூறப்பட்டவனே!

(க—ரை) முருகப்பெருமான் மலை, ஆறு, நாடு, ஊர் மாலை, குதிரை, யானை, கொடி, முரசு, ஆணை முதலிய பத்தங்கங்களையுடையவர் என்பதே இக்கண்ணிகளின் கருத்தென்க.

(வி—ரை) லளிதம் - அழகு. மீதானம் - மேலான இடம். "ஏறு மதம் தோய்ந்து .... கடாக் களிறும்" என்னும் கண்ணிகளுக்கு "முதன்மையாகிய சமயத்தைப்பொருந்தி ஆனந்தமுற்று ஒப்பற்ற (தனது) துதிக்கையினால் ஐந்து

வகையான கட்டுக்களை வெறுத்துச் சிவபெருமானிடத்தே அறிவைச் செலுத்திய ஆண்யானையும்" என்று பொருள் கூறுவாருமுளர். பஞ்சமலம் - ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என்பன. தேக்கமழ்ந்து - தெய்வத் தன்மை பொருந்தி யென்றலுமாம். பத்துவகை அங்கங்களாவன:- மலை, ஆறு, நாடு, ஊர், மாலை, குதிரை, யானை, கொடி, முரசு, ஆணை. இவற்றை,

"மலைநதி நாடூர் வனைதாரிவுளி
கொலைமதக் களிறு கொடிமுரசாணை
யிவையே தசாங்க மென்மனுர் புலவர்" என்னும்

சூத்திரத்தாலறிக. (இலக்கண விளக்கம், பாட்டியல் 22)

முருகப்பெருமானின் திருவவதாரம்

—தேசுதிகழ்

75 பூங்கயிலைவெற்பில்புனை மலர்ப்பூங்கோதையிடப்
பாங்குறையும் முக்கண் பரஞ்சோதி—ஆங்கு ஒருநாள்
76 வெந்தகுவர்க்கு ஆற்ருத விண்ணோர் முறைக்கு
ஐந்துமுகத்தோடு அதோமுகமும்-தந்து [இரங்கி
77 திருமுகங்கள் ஆறுகிச் செந்தழல்கண் ஆறும்
ஒருமுகமாய்த்தீப்பொறியாறுஉய்ப்ப-விரிபுவனம்
78 எங்கும் பரக்க இமையோர் கண்டு அஞ்சுதலும்
பொங்கு தழல் பிழம்பைப் பொற்கரத்தால்—அங்கண
79 எடுத்துஅமைத்துவாயுவைக்கொண்டு ஏகுதிஎன்று எம்மான்
கொடுத்துஅளிப்பமெல்லக்கொடுபோய்—அடுத்ததொரு
80 பூதத் தலைவ கொடுபோதியெனத், தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்று உய்ப்பப்—போதருசற்று
81 அன்னவளும்கொண்டு, அமைதற்குஆற்ருள்சரவணத்தில்
சென்னியில்கொண்டுஉய்ப்பத்திருவுருவாய்—முன்னா
82 அறுமீன் முலையுண்டு அழுது விளையாடி
நறுநீர் முடிக்கு அணிந்த நாதன்-குறுமுறுவல்

83 கன்னியொடும்சென்று அவட்குக்காதல்உருக்காட்டுதலும்
அன்னவள்கண்டு,அவ்வுருவம் அறிஇனயும்,-தன் இரண்டு
84 கையால்எடுத்து அணைத்துக், 'கந்தன்'எனப்பேர்புனைந்து
மெய்யாறும் ஒன்றாக மேவுவித்துச்,—செய்ய
85 முகத்தில் அணைத்து,"உச்சிமோந்து,முலைப்பால்
அகத்துள்மகிழ்பூத்து அளித்துச்,-சகத்துஅளந்த
86 வெள்ளை விடைமேல் விமலன் கரத்தில்அளித்து
உள்ளம் உவப்ப உயர்ந்தோனே!

(இ-ள்) தேசுதிகழ் - ஒளிவிளங்குகின்ற, பூங்கயிலை வெற்பில் - அழகிய திருக்கயிலாயமலையில், புனைமலர் பூங்கோதை - தொடுக்கப்பட்ட அழகிய பூமாலையை அணிந்த உமாதேவியாரை, இடப்பாங்கு உறையும் முக்கட் பரஞ்சோதி - வாமபாகத்தில் வைத்திருக்கப்பெற்ற மூன்று கண்களையுடைய சோதிவடிவாகிய சிவபெருமான், ஆங்கு ஒருநாள் - அக் கயிலைமலையில் ஒருநாள், வெம்தகுவர்க்கு ஆற்றாத விண்ணோர் முறைக்கு இரங்கி - கொடிய அசுரர்களுக்கு எதிர்நிற்கமாட்டாத தேவர்களுடைய முறையீட்டுக்குக் கருணைகூர்ந்து, ஐந்து முகத்தோடு அதோமுகமும் தந்து - (ஈசானம் முதலிய) ஐந்து முகங்களோடு கீழ்நோக்கிய முகமொன்றையுங் கொண்டு, திருமுகங்கள் ஆறாகி - திருமுகங்கள் ஆறாகப்பெற்று, செந்தழல் கண் ஆறும் - சிவந்த நெருப்புப்போன்ற ஆறு நெற்றிக்கண்களிலிருந்தும், ஒரு முகமாய்த் தீப்பொறி ஆறு உய்ப்ப - ஒருங்கே ஆறு தீப்பொறிகளை வெளிப்படுத்த, விரிபுவனம் எங்கும் பரக்க - அப்பொறிகள் விரிந்த புவனங்கள் எங்கும் பரவ, இமையோர் கண்டு அஞ்சுதலும் - தேவர்கள் கண்டு பயப்படுதலும், பொங்கு தழல் பிழம்பை - சீறுகின்ற அக்கினிப்பிழம்பை, பொற்கரத்தால் அங்கண் எடுத்து அமைத்து - அழகிய கரத்தினால் அவ்விடத்தினின்றும் எடுத்து (அதன் சீற்றத்தை)

அடக்கி, வாயுவைக்கொண்டு ஏகுதியென்று எம்மான் கொடுத்து அளிப்ப - வாயுபகவானை நோக்கி நீ இவற்றைக் கொண்டுசெல்லுதி என்று எம்மிறைவனாகிய சிவ பெருமான் கொடுப்ப, மெல்ல கொடுபோய் - (வாயுதேவனும்) மெல்லக் கொண்டுபோய், அடுத்ததொரு பூதத் தலைவ! - அடுத்து நிற்கின்ற பூதங்களுக்குத் தலைவனாக நிற்கின்ற அக்கினிதேவனே!, கொடுபோதி என - நீ கொண்டுபோவாயாக என, சீதப் பகீரதிக்குச் சென்று உய்ப்ப - (அக்கினிதேவன்) குளிர்ச்சியுள்ள "பகீரதி" என்னும் பெயரையுடைய கங்கையாற்றிற் கொண்டுபோய்ச் சேர்க்க, போது ஒரு சற்று - ஒருசிறிது காலம், அன்னவளும் கொண்டு அமைதற்கு ஆற்றாள் - அப் பகீரதியும் (அவ்வக்கினிப் பிழம்பைத்) தாங்கிக்கொண்டு இருப்பதற்கு ஆற்றாதவளாகி, சென்னியில் கொண்டு சரவணத்து உய்ப்ப - தலைமீது சுமந்துகொண்டுபோய் சரவணப்பொய்கையில் விட, திரு உருவாய் - (அத்தீப்பொறிகளாறும் ஆறு) திருவுருவங்களாய், முன்னர் அறுமீன் முலையுண்டு அழுது விளையாடி - முதலிலே ஆறு கார்த்திகைப்பெண்கள் கொடுத்த முலைப்பாலையுண்டு அழுது விளையாடியும், நறுநீர் முடிக்கணிந்த நாதன் - நல்ல நீரையுடைய கங்கையை முடியில் அணிந்த சிவபெருமான், குறுமுறுவற் கன்னியொடும் சென்று - புன்சிரிப்பையுடைய உமாதேவியாரொடும் சென்று, அவட்கு - அந்தவிக்கு, காதல் உரு காட்டுதலும் - (தனது) விருப்பத்தில் தோன்றிய திருவுருவத்தைக் காண்பித்தலும, அன்னவள் அவ்வுருவம் ஆறினையும் கண்டு - அவ்வுமாதேவியார் அத்திருவுருவங்கள் ஆறினையும் கண்டு, தன் இரண்டு கையால் எடுத்து அணைத்து - தனது இரண்டு கைகளினாலும் எடுத்துத் தழுவி, கந்தன் எனப் பேர்புனைந்து - 'கந்தன்' என்று பெயரிட்டு, மெய் ஆறும் ஒன்றாக மேவுவித்து - அந்த ஆறு திருவுருவங்களையும் ஒன்றாகப்

பொருந்தும்படி செய்து, செய்ய முகத்தில் அணைத்து உச்சிமோந்து - சிவந்த முகத்தில் அணைத்து உச்சிமுகந்து, அகத்துள் மகிழ் பூத்து முலைப்பால் அளித்து - தனது திருவுள்ளத்தில் மகிழ்ச்சிகொண்டு திருமுலைப்பாலைக் கொடுத்து, சகத்து அளந்த - உலகத்தை அளந்த, வெள்ளை விடைமேல் விமலன் - (திருமாலாகிய) வெண்மையான இடபத்தின்மீது அமர்ந்து விளங்கும் சிவபெருமானுடைய, கரத்தில் அளித்து - திருக்கரத்திற் கொடுத்து, உள்ளம் உவப்ப உயர்ந்தோனே - (சிவபெருமான்) மனம் மகிழும்படியாகச் சிறப்புற்றோனே! எ - று.

(க—ரை) சிவபெருமான் திருவருளால் முருகப்பெருமான் தோன்றினர் என்பது இக்கண்ணிகளில் கூறப்பட்டிருக்கிறதென்க.

(வி—ரை) முக்கண் - சூரியன், சந்திரன், அக்கினி என்பன; வலக்கண் சூரியனும், இடக்கண் சந்திரனும், நெற்றிக்கண் அக்கினியும் என்று கூறுவர். ஐந்துமுகம் - ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்பன. அதோமுகம் - கீழ்நோக்கிய முகம்.

76-ம், 77-ம் கண்ணிகளிற் கூறப்பட்ட செய்தியை,

"வந்திக்கு மலரோ னாதி வானவ ருரைத்தல் கேளாப்
புந்திக்கு விடர்செய் யற்க புதல்வனைத் தருது மென்னா
அந்திக்கு நிகர்மெய் யண்ண லருள்புரிந் தறிஞ ராயோர்
சிந்திக்குந் தனது தொல்லைத் திருமுக மாறுங் கொண்டான்
(கந்; திருவ. 43)"

என்னும் செய்யுளாலறியலாகும்.

சரவணம் - சரவணப்பொய்கை; சரவணம் - சரவனம். சரவனம் என்பது நாணற்காடு. கந்தன் - சேர்க்கப்பட்டவன்; "சேயவன் வடிவமாறுந் திரட்டிநீ யொன்றாய்ச்

செய்தாய், ஆயத னுலேகந்த னுமெனு நாமம் பெற்ருன்" என்பது கந்தபுராணம் (திருவிளை. 17). "ஆறுமோ ருருவ தாக வாக்கலிற் கந்த னுனன்" என்பது தணிகைப் புராணம்.

இதிற் சொல்லப்பட்ட செய்திகள் பரிபாடல் ஐந்தாம் பாட்டோடும் கந்தபுராணம் திருவவதாரப்படலத்தோடும் ஒத்துநோக்கற்பாலது.

முருகப்பெருமானின் திருவிளையாடல்கள்

—கிள்ளைமொழி,

87 மங்கை சிலம்பின்; மணி ஒன்பதில் தோன்றும்
துங்க மடவார் துயர்தீர்ந்து—தங்கள்
88 விருப்பால் அளித்த நவவீரருக்குள் முன்னேன்
மருப்பாயும் தார் வீரவாகு—நெருப்பில்உதித்து
89 அங்கண் புவனம், அனைத்தும் அழிந்துஉலவும்,
செங்கட்கிடாய்அதனைச் சென்றுகொணர்ந்து-எங்கோன்
90 விடுக்குதியென்று உய்ப்ப, அதன்மீது இவர்ந்து எண்திக்கும்
நடத்தி விளையாடும் நாதா!—படைப்போன்
91 அகந்தை உரைப்ப, மறையாதியெழுத்துஎன்று
உகந்தபிரணவத்தின் உண்மை-புகன்றிலையால்
92 சிட்டித் தொழில் அதனைச், செய்வது எங்ஙன் என்று முனம்
குட்டிச்சிறைஇருத்தும், கோமானே!-மட்டு அவிழும்
93 பொன்னங் கடுக்கைப்புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரமம் மொழிந்தோனே!-கொன்னெடு
94 தாரகனும் மாயத் தடங்கிரியும் தூளாக, [வேல்
வீர வடிவேல் விடுத்தோனே!—சீரலைவாய்
95 தெள்ளு திரைகொழிக்கும் செந்தூரில்போய்க்கருணை
வெள்ளம் எனத்தவிசின் வீற்றிருந்து,-வெள்ளைக்
96 கயேந்திரனுக்கு அஞ்சல் அளித்துக், கடல்சூழ்

மயேந்திரத்தில்புக்கு,இமையோர்வாழச்-சயேந்திரனும்
97 சூரனைச் சோதித்து வருகென்று, தடம்தோள்விசய
வீரனைத் தூதாகவிடுத்தோனே!— கார்அவுணன்
98 வானவரை விட்டு, வணங்காமையால் கொடிய
தானவர்கள் நாற்படையும் சங்கரித்துப்,—பானு
99 பகைவன் முதலாய பாலருடன் சிங்க
முகனைவென்று வாகைமுடித்தோய்!—சகமுடுத்
100 வாரிதனில் புதிய மாவாய்க் கிடந்தநெடும் [த
சூர்உடலம் கீண்ட சுடர்வேலோய்!-போர்அவுணன்
101 அங்கம் இருகூறாய் அடல்மயிலும் சேவலுமாய்த்
துங்கமுடன் ஆர்த்துஎழுந்து,தோன்றுதலும்—அங்கு
102 சீறும் அரவைப்பொருத சித்ரமயில்வாகனமா [அவற்றுள்
ஏறி நடாத்தும் இளையோனே!— மாறிவரு
103 சேவல் பகையைத் திறல்சேர் பதாகைஎன
மேவத் தனித்து உயர்த்த மேலோனே—மூவர்
104 குறைமுடித்து, விண்ணம் குடியேற்றித் தேவர்
சிறைவிடுத்து, ஆட்கொண்டு அளித்த தேவே!

(இ—ள்) கிள்ளை மொழி - கிளிமொழியைப்போன்ற மொழிகளையுடைய, மங்கை சிலம்பின் மணி ஒன்பதில் தோன்றும் - உமை அம்மையாரது சிலம்பின் நின்று சிதறிய ஒன்பது இரத்தினங்களில் தோன்றிய, துங்க மடவார் துயர்தீர்ந்து - பரிசுத்தம் பொருந்திய நவசத்திகளுடைய துன்பம் நீங்கி, தங்கள் விருப்பால் அளித்த நவ வீரருக்குள் - தங்கள் விருப்பத்தினால் பெற்ற ஒன்பது வீரருக்குள்ளே, முன்னோன் - முதல்வனாகிய, மருப்பாயும் தார்வீரவாகு - வாசனை வீசுகின்ற மலர்மாலையை அணிந்த வீரவாகுதேவர், நெருப்பில் உதித்து - வேள்வித்தீயில் பிறந்து, அம்கண் புவனம் அனைத்தும் அழித்து உலவும் - அழகிய இடமகன்ற புவனங்கள் எல்லாவற்றையும்

அழித்து உலாவுகின்ற, செம்கண் கிடாய் அதனை சென்று கொணர்ந்து - சிவந்த கண்களையுடைய ஆட்டுக்கிடாயை போய்ப் பிடித்துக்கொண்டு வந்து, எம்கோன் - எமது தலைவனே, விடுக்குதி என்று உய்ப்ப - (இதனை வாகனமாகச்) செலுத்துவாயாக என்று விடுக்க, அதன்மீது இவர்ந்து - அதன்மீது ஏறி, எண் திக்கும் நடத்தி விளையாடும் நாதா - எட்டுத் திக்குகளிலும் செலுத்தி விளையாடுகின்ற தலைவனே, படைப்போன் - பிரமதேவன், அகந்தை உரைப்ப - நானே உலகத்துக்குத் தலைவன் என்று கர்வங்கொண்டு கூற, மறை ஆதி எழுத்து என்று வேதத்தின் முதல் எழுத்தென்று, உகந்த பிரணவத்தின் - அறிஞரால் விரும்பப்பெற்ற பிரணவ மந்திரத்தின், உண்மை புகன்றிலையால் - உண்மைப்பொருளை உரைத்தாயில்லை, ஆகையால், சிட்டித் தொழில் அதனைச் செய்வது எங்ஙன் என்று - படைப்புத் தொழிலை நீ எவ்வாறு செய்யக்கூடும் என்று கூறி, முனம் குட்டிச் சிறை இருத்தும் கோமானே - முன்னர் குட்டிச் சிறையிலேயிட்ட தலைவனே, மட்டு அவிழும் பொன்னம் கடுக்கை - தேன் ஒழுகுகின்ற பொன்போலும் அழகிய கொன்றை மலரை, புரிசடையோன் - (தரித்த) முறுக்கையுடைய சடையையுடைய சிவபெருமான், போற்றிசைப்ப - போற்றித் துதிக்க, முன்னம் பிரமம் மொழிந்தோனே - முதன்மையாகிய பிரணவ மந்திரத்தின் பொருளை உரைத்தருளியவனே, கொல் நெடுவேல் தாரகனும் - கொல்லும் தொழிலையுடைய நெடிய வேலைத்தாங்கிய தாரகாசுரனும், மாயத் தடம்கிரியும் - மாயம்பொருந்திய விசாலமான கிரௌஞ்சமலையும், தூளாக வீரவடிவேல் விடுத்தோனே - தூளாகி அழிந்துபோகும் பொருட்டு வெற்றி பொருந்திய கூர்மையான வேற்படையைச் செலுத்தியருளியவனே!, தெள்ளு திரை கொழிக்கும் - தெளிந்த திரைகளை வீசுகின்ற, சீரலைவாய் செநதூரில் போய் - திருச்சீரலைவாய் என்னும் நாமத்தை

யுடைய திருச்செந்தூரில் போய், கருணை வெள்ளம் என தவிசில் வீற்றிருந்து - அருள்வெள்ளம்போன்ற ஆசனத்தில் இருந்து, வெள்ளைக் கயேந்திரனுக்கு அஞ்சல் அளித்து - வெள்ளை யானையையுடைய தேவேந்திரனுக்கு அபயங் கொடுத்தருளி, கடல்சூழ் மகேந்திரத்தில் புக்கு - கடலால் சூழப்பெற்ற மகேந்திரபுரத்துக்குப் போய், இமையோர் வாழ - தேவர்கள் வாழும்பொருட்டு, சயேந்திரனும் சூரனை - வெற்றியையுடைய சூரபன்மனை, சோதித்து வருக என்று - (தூதுபோய்) வினவி வருவாயாகவென்று, தடம் தோள் விசய வீரனைத் தூதாக விடுத்தோனே - விசாலமான தோள்களையுடைய வெற்றிபொருந்திய வீரவாகு தேவரைத் தூதாக விடுத்தருளியவனே!, கார் அவுணன் வானவரை விட்டு வணங்காமையால் - கரிய நிறத்தையுடைய சூரபன்மன் தேவர்களைச் சிறையினின்றும் விடுதலை செய்து வணங்காமையினால், கொடிய தானவர்கள் நாற்படையும் சங்கரித்து - கொடிய அசுரர்களுடைய நால்வகைப் படைகளையும் அழித்து, பானுபகைவன் முதலாய பாலருடன் - பானுகோபன் முதலிய மற்றைப் பிள்ளைகளோடு, சிங்கமுகனை வென்று-சிங்கமுகாசுரனையும் வென்று, வாகை முடித்தோய் - வெற்றிமாலை சூடியவனே!, சகம் உடுத்த வாரிதனில் - உலகத்தைச் சூழ்ந்த கடலில், புதிய மாவாய் கிடந்த - புதுமையான மாமரமாய்த் தோன்றிய, சூர் நெடும் உடலம் கீண்ட நெடுவேலோய்! - சூரபன்மனுடைய பெரிய உடலைப் பிளந்த ஒளிவீசுகின்ற வேற்படையையுடையவனே!, போர் அவுணன் அங்கம் இரு கூறாய் - போர்த் தொழிலில் வல்ல சூரபன்மனுடைய உடல் இரண்டுகூறாகி, அடல் மயிலும் சேவலுமாய் - (ஒன்று) வலிமையையுடைய மயிலும் (மற்றொன்று) சேவலுமாக, துங்கமுடன் ஆர்த்து எழுந்து தோன்றுதலும் - சிறப்புடன் ஆரவாரித்து எழுந்து விளங்குதலும், அங்கு அவற்றுள் - அவ்விடத்தில் தோன்றிய அவ்

விரண்டனுள், சீறும் அரவைப் பொருத - சீறுகின்ற பாம்பைக் கொல்லுகின்ற, சித்ரமயில் வாகனம் ஆக - அழகிய மயிலை வாகனமாகக் கொண்டு, ஏறி நடாத்தும் இளையோனே - ஏறிச் செலுத்துகின்ற இளமையையுடையவனே, மாறிவரும் சேவல் பகையை - மாறுபட்டு வருகின்ற சேவலாகிய பகைவனை, திறல்சேர் பதாகை என மேவ - வலிமை பொருந்திய சேவற்கொடியாக்கி, தனித்து உயர்த்த மேலோனே - ஒப்பற்று விளங்கும்படி உயர்த்திய மேன்மையுடையவனே! மூவர் குறை முடித்து - மும்மூர்த்திகளுடைய குறைகளைப் பூர்த்திசெய்து, தேவர் சிறை விடுத்து - தேவர்களைச் சிறையினின்றும் விடுவித்து, விண்ணம் குடியேற்றி - (அவர்களைத்) தேவலோகத்தில் குடியேற்றுவித்து, ஆட்கொண்டு அளித்த தேவே - ஆட்கொண்டருளிய தேவரீரே. எ - று.

(க—ரை) முருகப்பெருமான் என்னென்ன திருவிளையாடல்களைச் செய்தாரென்று இக்கண்ணிகள் கூறுகின்றனவென்க.

(வி—ரை) மணி ஒன்பது - நவரத்தினங்கள்; மாணிக்கம், முத்து, புட்பராகம், கோமேதகம், வைடூரியம், வைரம், மரகதம், பவளம், இந்திரநீலம் என்பன. துங்க மடவார் - கவசத்திகள்; மாணிக்கவல்லி, தரளவல்லி, புட்பராகவல்லி, கோமேதகவல்லி, வைடூரியவல்லி, வைரவல்லி, மரகதவல்லி, பவளவல்லி, இந்திரநீலவல்லி என்போராவர். நவவீரர் - வீரவாகு, வீரகேசரி, வீரமகேந்திரர், வீரமகேச்சுரர், வீரபுரந்தரர், வீரராட்சசர், வீரமார்த்தாண்டர், வீராந்தகர், வீரதீரர் என்னும் ஒன்பதின்மராவர். இந் நவவீரர்கள் வந்த வரலாற்றைக் கந்தபுராணம் துணைவர் வருபடலத்திற் காண்க. (துணைவர் செய்: 24—34).

கிடாய் - ஆட்டுக்கிடாய். நாரதமுனிவர் செய்த யாகத்தினின்றும் எழுந்த ஆட்டுக்கிடாயை முனிவர்கள் வேண்டுகோட்படி வாகனமாய் ஊர்ந்த சரித்திரத்தைக் கந்தபுராணம் தகரேறுபடலத்திற் காண்க. இன்னும்,

"ஒருமையு ளொருங்கி யிருகை நெய்வார்த்து
நாரத னோம்பிய செந்தீக் கொடுத்த
திருகுபுரி கோட்டுத் தகர்வரு மதியோய்!"

(கல்லாடம் கட. 2)

என்னும் கல்லாடச் செய்யுளாலும் அறிக.

வீரவாகுதேவரே முருகப்பெருமானின் திருவுளப்பாங்கின்படி பிரமதேவனைக் குட்டிச் சிறையில் வைத்தாரென்று சங்கரசங்கிதையும், முருகப்பெருமானின் கட்டளைப்படி கணநாதர்கள் பிரமனைக் குட்டிச் சிறையிலிட்டார்களென்று தணிகைப் புராணமும், முருகப்பெருமானே பிரமனைக் குட்டிச் சிறையிலிட்டாரென்று கந்தபுராணமும் கூறுகின்றன. அவற்றின் பேதங்களை அவ்வவ் நூல்களில் காண்க. இன்னும் கல்லாடத்தில் பிரமதேவன் "ஓம்" என்னும் பிரணவத்திற்கு உண்மைப் பொருளுரைக்காதபடியால் அப் பிரமதேவனைச் சிறை வைத்தலும், அதனால் உலகத்தில் படைத்தற் றொழிலுக்குத் தடை உண்டாதலும் அதுகாரணமாகச் சிவபெருமான் முருகப்பெருமானிடம் சென்று பிரமதேவனை விடுவித்தருளியதும் கூறப்பட்டிருக்கின்றன. இதனை

"ஓமெனும் எழுத்திற் பிரமம் பேசிய
நான்மறை விதியை நடுங்குசிறை வைத்துப்
படைப்புமுதன் மாயவான்முதற் கூடித்
தாதையு மிரப்பத் தளையது விடுத்தோய்"

(கல்லாடம் கட. 2)

என்னும் கல்லாடச் செய்யுளாலறிக.

மயேந்திரம் - வீரமகேந்திரபுரம். இது சூரனுடைய பட்டினம். சூரபன்மன் - சூரனும் பதுமனும் என்னும் இரண்டு பெரிய உருவங்களைக் கொண்ட ஒரு யாக்கையை யுடையவன். திருமுருகாற்றுப்படையில் "இருபேருருவின் ஒருபேர் யாக்கை" என்பதனால் அறிக. சூரபன்மனைத் தடிந்தபொழுது அங்கம் இருகூறுகி ஒருகூறுகிய சூரன் மயிலாயும், மறுகூறுகிய பதுமன் சேவலாயும் தோன்றிய வற்றாலும் அறிக. இவற்றை,

"தாவடி நெடுவேள் மீளத் தற்பரன் வரத்தால்வீடா
மேவல னெழுந்து மீட்டுமெய் பகிரிரண்டு கூறுஞ்
சேவலும் மயிலுமாகி................."

(சூரபன்மன் வதை செய். 492)

என்னும் கந்தபுராணச் செய்யுளால் அறிக.

நாற்படை - நாலுவகைப்படை; தேர்ப்படை, யானைப் படை, குதிரைப்படை, காலாட்படை என்பன. "வெல்லு மால் யானை தேரே வெம்பரி காலாளாமே" என்பது சூடாமணி நிகண்டு.

பானுபகைவன் முதலாய பாலர் - பானுகோபன், அக் கினிமுகன், வச்சிரவாகு, மூவாயிரவர் முதலியவர். சிங்க முகன்-சிங்கமுகாசுரன்; சூரனுடைய தம்பி. ஆசுரபுரியைத் தலைநகராகக் கொண்டவன், ஞானவான். சுப்பிரமணியப் பெருமானுடைய வல்லமைகளைச் சூரபன்மனுக்கு அறி வித்தவன். ஆயிரம் சிங்கமுகங்களையும் இரண்டாயிரம் கைகளையுமுடையவன்.

முருகப்பெருமானின் திருமணம்

—மறைமுடிவு ஆம்

105 சைவக் கொழுந்தே! தவக்கடலே; வான் உதவும்
தெய்வக் களிற்றை மணஞ் செய்தோனே—பொய்விரவு

106 காமம் முனிந்த கலைமுனிவன் கண் அருளால்,
வாம மடமானின் வயிற்று உதித்துப்,—பூமருவு
107 கானக் குறவர் களிகூரப், பூங்குயில்போல்
ஏனல்புனங்காத்து இனிது இருந்து,-மேன்மைபெறத்
108 தெள்ளித் தினைமாவும் தேனும் பரிந்து அளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே!

(இ—ள்) மறைமுடிவு ஆம் சைவக்கொழுந்தே - வேதங்களின் முடிபாயுள்ள சைவத்தின் தளிரே! தவக்கடலே - தவமாகிய சமுத்திரமே! வான் உதவும் தெய்வக் களிற்றை மணம் செய்தோனே - தேவலோகத்துக்குத் தலைவனாகிய இந்திரன் அளித்த தெய்வயானை யம்மையாரைத் திருமணஞ் செய்தவனே!, பொய் விரவு காமம் முனிந்த - பொய் கலந்த உலக இச்சையைத் துறந்த, கலைமுனிவன் கண் அருளால் - கலைகளை உணர்ந்த முனிவன் கண்ணுற்று கிருபை செய்தலால், வாம மடமானின் வயிற்று உதித்து - அழகிய இளமைத் தன்மையையுடைய பெண்மானின் வயிற்றில் பிறந்து, பூமருவு கானக் குறவர் - பூக்கள் மலிந்த கானகத்திலேயுள்ள குறவர்கள், களிகூர - மகிழ்ச்சியடையும்பொருட்டு, பூங்குயில்போல் - அழகிய குயிலைப்போல, ஏனல் புனம் காத்து இனிது இருந்து - தினைப்புனத்தைக் காத்து சுகமாயிருந்து, மேன்மைபெற - மேலான பதவியையடைய, தெள்ளி தினைமாவும் தேனும் பரிந்து அளித்த - தெள்ளிய தினைமாவையும் தேனையும் பிசைந்து அன்போடு கொடுத்த, வள்ளிக்கொடியை மணந்தோனே - கொடிபோன்ற வள்ளிநாயகியாரை திருமணஞ் செய்தவனே! எ - று.

(க—ரை) தெய்வயானையம்மையாரையும் வள்ளிநாயகியாரையும் முருகப்பெருமான் திருமணஞ்செய்த செய்திகள் இக்கண்ணிகளில் கூறப்பட்டிருக்கின்றனவென்க.

(வி—ரை) தெய்வக் களிறு - தெய்வயானையம்மையார்; இங்கே களிறென்பது யானையென்னும் பொருட்டாய் நின்றது. "குமரநாயகன் றெய்வதக் களிற்றொடுங் கூடி", "சேணுதித்திடு தெய்வதக் களிற்றினைச் செவ்வேள், நாணினிற் கட்டி" என்பவற்றாலறிக. (கந்தபு: தெய்வா: 260, 264). கலைமுனிவன் - கலைகளையுணர்ந்த முனிவன்; சிவமுனிவன். 'பூங்குயில்போல்' என்றது காக்கையால் வளர்க்கப்பெற்ற குயில் பின்பு தன் இனத்தோடு சேர்தலைப்போல, குறவர்களால் வளர்க்கப்பெற்றுப் பின்பு தமக்குரிய இடத்தைச் சேர்ந்தாரென்ற கருத்தை உள்ளடக்கியது.

முருகப்பெருமான் எழுந்தருளியிருக்குமிடங்கள்

—உள்ளம்உவந்து

109 ஆறுதிருப்பதிகண்டு, ஆறுஎழுத்தும்,அன்பினுடன்
கூறும்அவர் சிந்தை குடிகொண்டோனே-நாறுமலர்க்
110 கந்திப்பொதும்பர்எழு, கார்அலைக்கும் சீர்அலைவாய்ச்
செந்திப் பதிபுரக்கும் செவ்வேளே!

(இ—ள்) உள்ளம் உவந்து - மனம் மகிழ்ந்து, ஆறு திருப்பதி கண்டு - ஆறு திருப்பதிகளையும் தரிசித்து, ஆறு எழுத்தும் - சடக்ஷர மந்திரத்தை, அன்பினுடன் கூறுமவர் - அன்போடு ஓதுகின்றவர்களின், சிந்தை குடிகொண்டோனே - உள்ளத்தை இருப்பிடமாகக் கொண்டவனே! நாறுமலர் கந்திப் பொதும்பர் - வாசனை வீசுகின்ற மலர்களையுடைய கமுகஞ்சோலை, எழு கார் அலைக்கும் - எழுகின்ற மேகத்தை அலைக்கின்ற, சீரலைவாய் செந்திப் பதிபுரக்கும் செவ்வேளே - சிறப்புப்பொருந்திய கடற்கரையிடத்தேயுள்ள திருச்செந்தூர் என்ற தலத்தைப் பாதுகாக்கின்ற முருகக்கடவுளே! எ - று.

(கு—ரை) இக்கண்ணிகளில் முருகப்பெருமான் அன்பர் மனத்திலும் திருச்செந்தூரிலும் எழுந்தருளியிருப்பார் என்று கூறப்பட்டிருக்கின்றதென்க.

(வி—ரை) ஆறு திருப்பதி - திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோருடல், பழமுதிர்சோலை யென்பன; இவற்றை ஆறுபடைவீடென்பர். கந்திப் பொதும்பர் - கமுகஞ்சோலை.

அடியாரின் வேண்டுகோள்

—சந்ததமும்

111 பல்கோடி சன்மப் பகையும் அவமிருத்தும்
பல்கோடி விக்கினமும், பல்பிணியும்-பல்கோடி
112 பாதகமும்,செய்வினையும்,பாம்பும், பசாசும்,அடல்
பூதமும், தீநீரும், பொருபடையும்—தீதுஅகலா
113 வெவ்விடமும், துட்டமிருகம் முதலாம் எவையும்
எவ்விடம்வந்து எம்மை எதிர்ந்தாலும்-அவ்விடத்தில்
114 பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டுதிண்தோ
அச்சம் அகற்றும் அயில்வேலும்-கச்சைத் [ளும்,
115 திரு அரையும் சீறடியும், செங்கையும், ஈராறு
அருள்விழியும், மாமுகங்கள் ஆறும்-விரிகிரணம்
116 சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓர் ஆறும்,
எந்தத்திசையும் எதிர்தோன்ற-வந்து,இடுக்கண்
117 எல்லாம் பொடிபடுத்தி, எவ்வரமும்தந்துபுகுந்து
உல்லாசமாக உளத்து இருந்து,—பல்விதம் ஆம்
118 ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவதானமும், சீர்
பேசும்இயல் பல்காப்பியத்தொகையும்—ஓசை
119 எழுத்துமுதலாம்ஐந்து இலக்கணமும்,தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமைபாலித்து,-ஒழுக்கமுடன்

120 இம்மைப் பிறப்பில், இருவாதனை அகற்றி
மும்மைப்பெருமலங்கள்மோசித்துத்—தம்மைவிடுத்து
121 ஆயும் பழைய அடியாருடன் கூட்டித்,
தோயும் பரபோகம் துய்ப்பித்துச்—சேய
122 கடியேற்கும்,பூங்கமலக்கால்காட்டி,ஆட்கொண்டு
அடியேற்கு முன்னின்று அருள்!.

(இ—ள்) சந்ததமும் - எப்பொழுதும், பல்கோடி சன்மப் பகையும் - எண்ணிறந்த பிறவித் துன்பங்களும், அவமிருத்தும் - அகால மரணமும், பல்கோடி விக்கினமும் - எண்ணிறந்தவிடையூறுகளும், பல்பிணியும் - பலவிதமான நோய்களும், பல்கோடி பாதகமும் - எண்ணிறந்த பாதகங்களும், செய்வினையும் - (பிறராற்) செய்யப்படுகின்ற சூனியமும், பாம்பும் - பாம்புகளும், பசாசும் - பேய்களும், அடல் பூதமும் - வலிமையுள்ள பூதங்களும், தீநீரும் - அக்கினியும் தண்ணீரும், பொருபடையும் - போர்செய்கின்ற ஆயுதங்களும், தீது அகலா வெவ்விடமும் - தீமையைச் செய்கின்ற தீக்குணத்தினின்றும் நீங்காத கொடிய விஷமும், துட்ட மிருகம் முதலாம் எவையும் - துட்ட குணமுள்ள மிருகங்கள் முதலாகிய யாவும், எவ்விடம் வந்து - எந்த இடத்திலே தோன்றி, எம்மை எதிர்ந்தாலும் - எம்மைத் தாக்கினாலும், அவ்விடத்தில் - அந்தவிடத்தில், பச்சை மயில் வாகனமும் - பச்சைநிறம் பொருந்திய மயில்வாகனமும், பன்னிரண்டு திண்தோளும் - வலிமை பொருந்திய பன்னிரண்டு தோள்களும், அச்சம் அகற்றும் அயில் வேலும் - பயத்தைப் போக்குகின்ற கூர்மையையுடைய வேலாயுதமும், கச்சை திரு அரையும் - கச்சையையணிந்த அழகிய இடையும், சிறடியும் - சிறிய திருவடிகளும், செங்கையும் - சிவந்த (பன்னிரண்டு) திருக்கரங்களும், ஈராறு அருள்விழியும் - அருளைப் பொழிகின்ற பன்னிரண்டு திருக்கண்களும், மாமுகங்கள் ஆறும் - சிறந்த திருமுகங்கள்

ஆறும், விரிகிரணம் சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓர் ஆறும் - பரவுகின்ற கிரணங்கள் வீசும்பொருட்டு அணிந்த அழகிய முடிகள் ஆறும், எந்தத் திசையும் எதிர்தோன்ற வந்து - எந்தத் திக்குகளிலேயும் எதிரே தோன்றுமாறு வந்து, இடுக்கண் எல்லாம் பொடிபடுத்தி - துன்பங்களெல்லாம் பொடிபடுமாறு செய்து, எவ்வரமும் தந்து - எல்லா வரங்களையும் தந்து, உல்லாசமாக உளத்திற் புகுந்து இருந்து - மகிழ்ச்சியாக (எனது) மனத்துட் புகுந்து இருந்து, பல்விதமாம் ஆசுமுதல் நால் கவியும் - பலவகைப்பட்ட ஆசுகவி முதலாகிய நால்வகைக் கவிகளும், அட்டாவதானமும் - ஒரே காலத்தில் எட்டுவித வினுக்களுக்கு விடை அளிக்கும் கவன சக்தியும், சீர் பேசும் இயல் பல்காப்பியத் தொகையும் - சிறப்போடு பேசப்படுகின்ற இலக்கண அமைதியுடைய பல காவியங்களின் தொகுதியும், ஓசை - ஒலியையுடைய, எழுத்து முதலாம் ஐந்து இலக்கணமும் தோய்ந்து - எழுத்தை முதலாகச் சொல்லப்படுகின்ற பஞ்ச இலக்கணங்களிலும் படிந்து, பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து - முதிர்ந்த தமிழ்ப்புலமையைத் தந்தருளி, ஒழுக்கமுடன் - நல்லொழுக்கத்தோடு, இம்மைப் பிறப்பில் இருவாதனை அகற்றி - இப்பிறப்பில் இருவகைப் பற்றுக்களையும் நீக்கி, மும்மைப் பெருமலங்கள் மோசித்து - பெரிதாகிய ஆணவம், கன்மம், மாயை என்று சொல்லப்பட்ட மூன்று மலங்களையும் நீக்கி, தம்மை விடுத்து - நான் என்னும் அகங்காரத்தை விடுத்து, ஆயும் பழைய அடியாருடன் கூட்டி - ஆராய்கின்ற பழைய அடியார்களுடைய கூட்டத்தில் (என்னைச்) சேர்த்து, தோயும் பரபோகம் துய்ப்பித்து - அநுபவிக்கின்ற பேரின்பத்தை அனுபவிக்கச்செய்து, சேய கடி எற்கும் பூங்கமலம் கால்காட்டி - சிவந்த வாசனையுள்ள தாமரைமலர்போன்ற திருவடிகளை (தரிசிக்கும்படி) தந்து, ஆட்கொண்டு - ஆட்கொண்டருளி, அடியேனுக்கு முன்

நின்று அருள் - அடியேனுக்கு (எப்பொழுதும்) முன்னே தோன்றி அருள் செய்வாயாக! எ - று.

(க—ரை) முருகக்கடவுளின் அன்பர்கள் வேண்டுவன வற்றை இக்கண்ணிகள் கூறுகின்றனவென்க.

(வி—ரை) நாற்கவி - ஆசுகவி, மதுரகவி, சித்திரக்கவி, வித்தாரகவி என்பன. ஐந்து இலக்கணம் - எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன. இருவாதனை - அகப்பற்றும், புறப்பற்றுமாகிய இரண்டும். பழைய அடியார் - தொன்றுதொட்டு அடிமைத்திறம் பூண்டோர்.

கந்தர் கலிவெண்பா மூலமும் உரையும்
முற்றுப்பெற்றன.

இராசகுமாரன் அச்சகம், யாழ்ப்பாணம்.

Printed at the
Rajakumaran Press.
Jaffna.